வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 29.12.2022 வியாழக்கிழமை | இதழ் : 20 | பக்கங்கள் : 16




## இனப் பிரச்னை தீர்வை

# தமிழ் கட்சிகளிடம் எதிர்பார்க்காதீர்கள்

### கூட்டமைப்பின் வினோ நோகராதலிங்கம் எம். பி.



வவுனியா, டிசெம்பர் 29

இனப் பிரச்னைக்கான தீர்வை பெற்றுத் தருவார்கள் என்று தமிழ் கட்சிகளின் தலைவர்களிடம் எதிர்பார்க்க முடியாது என்று தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம்.

15

## ஹெரோயினால் 15ஆவது உயிர் பறி போனது!

யாழ்ப்பாணம்,டிசெ.29

அதிகளவான ஹெரோயின் போதைப் பொருளைப் பாவித்த இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலத்தில் ஹெரோயினால் ஏற்பட்ட 15ஆவது மரணமாக இது அமைந்துள்ளது.

திருநெல்வேலி - தலங்காவல் பிள்ளையார் கோயிலடியை சேர்ந்த 25 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்

15

## யாழில் சுதந்திர தினம் ஜனாதிபதி பங்கேற்பார்!



யாழ்ப்பாணம், டிசெ. 29

நாட்டின் 75ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் பெப்ரவரி 17ஆம் திகதி நடக்கும் சுதந்திர நாள் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல் நேற்று மாவட்ட செயலகத்தில்

15

## தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டுக்கு மாவை தலைமை!

### வரவேற்கின்றது ரெலோ

யாழ்ப்பாணம், டிசெ. 29

மாவை சேனாதிராசா தலைமையில் தமிழ்த் தேசிய கட்சிகளை ஓரணியில் திரட்டும் விக்னேஸ்வரனின் யோசனையை வரவேற்பதாக தமிழீழ விடுதலை இயக் கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில், தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் செயல்பட வேண்டும். அதற்கு மாவை சேனாதிராசா தலைமை தாங்கக் கூடியவர் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

15

## தமிழ் தரப்புகளுடன் இணைந்து செயல்படுவதற்கு நான் தயார்!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், டிசெ. 29

நடைமுறை சாத்தியமான வழிமுறையை ஏற்று - வெளிப்படைத் தன்மையுடன் செயல்படக்கூடிய தமிழ் தரப்புக்களுடன் - தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பான விடயத்தில் இணைந்து செயல்பட தயார் என்று கூறியிருக்கிறார் ஈ. பி. டி. பியின் டக்ளஸ் தேவானந்தா.

அத்துடன், ஜனாதி பதியின் நிறைவேற்று

15

## வேட்டியுடன் வந்த சீன தூதரக அதிகாரி!



யாழ்ப்பாணம், டிசெ. 29

சீனாவின் உதவி தூதுவர் ஹூ வெய் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர். இவ்வாறு வந்தவர்களில் ஓர் அதிகாரி தமிழர் பாரம்பரிய உடையை அணிந்து வருகை தந்தார்.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வந்த சீனத் தூதுவர் கியூ சென்ஹொங் தலைமையிலான குழுவினர் நல்லூர் ஆலயத்துக்கு பட்டு வேட்டி அணிந்து சென்றிருந்தனர். இது தமிழ் மக்களிடையே வரவேற்பை பெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமெரிக்க பணக்கார தமிழரான ராஜ் இராஜரட்ணம் யாழ். வந்தார்!



யாழ்ப்பாணம், டிசெ. 29

இலங்கையில் பிறந்தவரும் அமெரிக்காவின் பெரிய பணக்காரர்களில் ஒருவருமான ராஜ் இராஜரட்ணம் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ். போதனா மருத்துவமனைக்கு சென்ற அவர் மருத்துவமனையின் செயல்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

இதனிடையே, ராஜ் இராஜரட்ணம் அமெரிக்கா திரும்பும் முன்னர் அரசியல்வாதிகள் சிலரை

15

## கோவிட் சுகாதார விதிகளை மக்கள் பின்பற்றவேண்டும்!

### விரைவில் அறிவிப்பு வரும் என்கிறார் கெஹலிய



கொழும்பு, டிசெ. 29

கோவிட் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் தொடர்பான உத்தியோக பூர்வ தீர்மானம் ஓரிரு நாட்களுக்குள் அறிவிக்கப்படும் - என சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொருளாதாரத்தை அவதானத்தில் கொண்டு அனைத்து தீர்மானங்களும் எடுக்கப்பட வேண்டும். பொது மக்கள் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை முழுமையான கடைப்பிடிக்க வேண்டும்.

15

## அமைச்சர்கள் நியமனம் நான் தலையிட மாட்டேன்!

### ஜனாதிபதிக்கு கூறினார் மகிந்த!

கொழும்பு, டிசெ. 29

புதிய அமைச்சரவை நியமனம் பற்றி நான் எதுவும் பேசவோ - தலையிடவோ மாட்டேன். நீங்கள் யாரை வேண்டுமானாலும் அமைச்சர்களாக நியமியுங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறியுள்ளார் முன்னாள் பிரதமரும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ.

15

## புலிகள் கோட்டையில் சண்டையிட்டார்களா?

### சீன தூதுவர் குழு கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாணம் வந்த சீன உதவித் தூதுவர் குழுவினர் கோட்டையை சுற்றிப் பார்த்தனர். இதன் போது, “விடுதலைப் புலிகளுடன் இங்கு சண்டை நடந்ததா?”, என்று அவர்களுக்கு பாதுகாப்பாக வந்த பொலிஸாரிடம் கேள்வி எழுப்பியிருந்தனர். அவர்களின் இந்தக் கேள்விக்கு “ஆம் நடந்தது”, என்று பதிலளித்தனர் பொலிஸார்.

சீனாவின் இலங்கைக்கான உதவி தூதுவர் ஹூ வெய், அரசியல் விவகார அதிகாரி லியோசொங் உள்ளிட்டவர்கள் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்தனர்.

இவர்கள் நேற்றைய தினம் கோட்டை பகுதியைப் பார்வையிட்டனர்.

15

## உள்ளூராட்சி மன்ற தேர்தல்:

## ஒரு வருடத்துக்கு பிற்போட அரச தரப்பு கலந்துரையாடல்!

கொழும்பு, டிசெ. 29

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒரு வருடத்துக்கு பிற்போடுவது தொடர்பில் நேற்றைய தினம் அரச தரப்புகள் நடத்திய கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது. தேர்தலுக்காக பெரும் தொகை நிதி செலவிடும் போது, அது அரச வருமானத்தை நேரடியாக பாதித்து விடும். இதனால் மீண்டும் நாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சி ஏற்பட்டால் கட்டியெழுப்புவது என்பது கடினமாகிவிடும் என்று இதன்போது கருத்து வெளியிடப்பட்டதாகத் தெரிய வருகிறது.

அத்துடன்,

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமை குறித்த செய்திகள் நமக்கு புதியவையல்ல. இதுபோன்ற செய்திகள் நாம் பல தடவைகள் படித்தவைதான்.

இதுபோன்ற முயற்சிகளைச் செய்பவர்கள் அது நடைபெறக்கூடிய வகையில் அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்பதே இந்த ஊர்க்குருவியின் விருப்பமாக இருந்தது.

அதனால்தான், இந்தக் கூட்டத்தைக் கூட்டிய விவகாரத்தையும் அதில் மாவையின் பங்களிப்பையும் இந்தப் பத்தியில் கேள்விக்கு உட்படுத்தியிருந்தோம்.

இதுபோன்ற முயற்சிகளை செய்பவர்கள் அதனை ஆரம்பத்திலேயே சரியான முறையில் திட்டமிடவில்லை என்றால், அது முதல்கோணல் முற்றிலும் கோணலாகிவிடும் என்பதை சுட்டிக்காட்டுவதற்காகவே அவ்வாறு குறிப்பிட வேண்டியதாயிற்று.

எமது சந்தேகம் அல்லது எதிர்பார்ப்பு சரியானதுதான் என்பதையே அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு கட்சித் தலைவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தற்போதைய நிலையில் மாவை சேனாதிராசாவை தலைவராகக் கொண்டு, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் செயல்படவேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் அறிக்கை வெளியிட்டு எமது ஊகங்களுக்கு விடையளித்திருக்கின்றார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளருக்கு தகுதியில்லை என்பதால்தான் மாவை வேட்பாளராக்கப்படவில்லை என்று முன்னர் ஒரு தடவை தெரிவித்திருந்தவர் விக்னேஸ்வரன். அது மாத்திரமல்ல, வேலன் சுவாமிகள் முதலமைச்சர் வேட்பாளராகத் தகுதியான ஆள் என்று அதன்பின்னர் கூறியவர்.

அத்தகைய ஒருவரை இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தலைமை தாங்க அழைப்பு விடுக்கிறார்.

இந்த இடைப்பட்ட காலத்தில் மாவை தகுதியான ஆளாக மாறியிருக்கிறாரா அல்லது அந்த தேசியக் கட்சிகளுக்கு தலைமை தாங்குவதற்கு அவரின் தகுதியே போதுமானது என்கிறாரா என்பது தெரியவில்லை.

ஏற்கனவே, தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியிலேயே மாவை ஆளுமையோடு பணியாற்றினாரா என்பது விக்னேஸ்வரனுக்கு தெரியாததல்ல. அவர் ஆளுமையுள்ள தலைவராக இருந்திருந்தால், இன்று விக்னேஸ்வரன் என்ற ஒருவரே தமிழ்த் தேசிய அரசியலில் இருந்திருப்பாரா என்பது அவருக்கு தெரியாததல்ல.

அண்மைக்காலமாக தமிழரசு, புதிய தலைவர் ஒருவரின் கீழ் செயல்பட்டால்தான் அந்தக் கட்சியையே காப்பாற்ற முடியும் என்ற குரல்கள் பலமாக கேட்கத்தொடங்கியிருக்கின்றன.

அந்தப் பதவியில் குறிவைத்திருக்கும் ஒரு முக்கிய தலைவருடன் தொலைபேசியில் காலை தொடர்புகொண்டு கேட்டேன், 'உங்களுக்கு விக்னேஸ்வரன் வழிகாட்டுகிறார் போல் தெரிகின்றதே' என்று.

அவருக்குப் புரியவில்லை. நானே சொன்னேன், 'இனி என்ன புதிய தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டணிக்கு மாவை தலைவராகிவிட்டால், நீங்கள் தமிழரசின் தலைவராகுவதில் இனி சிரமம் இருக்காதுதானே' என்று.

அவர் மிகுந்த கோபத்துடன் சொன்னார், 'கூட்டமைப்பை பலவீனப்படுத்தி முடிந்தது. இப்போது சம்பந்தனையும் இல்லாமல் செய்ய முயற்சி நடக்கின்றது போல' என்று.

சம்பந்தன் குறித்து எமக்கும் பல விமர்சனங்கள் உண்டு. அவர் பல சந்தர்ப்பங்களில் தனது ஆளுமையை வெளிப்படுத்தவில்லை என்பதை 'ஈழநாடு' பல தடவை தனது ஆசிரியத் தலையங்கங்களிலும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ஆனால், அதேவேளையில் சம்பந்தன் என்ற ஒரு தனிமனிதனால் மாத்திரமே கூட்டமைப்பு என்ற அமைப்பு இன்று வரை சிதைந்துவிடாமல் இருக்கின்றது.

அண்மையில், சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்து திருகோணமலைக்கு ஒரு பிரதிநிதி தெரிவாகவேண்டும் என்ற கோரிக்கை முன்வைகப்பட்டபோது, அப்படி செய்தாலும் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிவிலகி சம்பந்தனை எம்.பி. ஆக்கவேண்டும் என்று சிறீகாந்தா அறிக்கை வெளியிட்டிருந்தார்.

ஆக, சம்பந்தனை ஓரம்கட்டி ஒரு கூட்டணியை ஆரம்பிக்க நினைப்பது உண்மையான ஒற்றுமைக்கான முயற்சியாக இருக்காது. இதனால்தான் நேற்றைய இந்தப் பத்தியில் ஒற்றுமையை தமிழரசோ, அல்லது ரெலோவோ முன்னெடுக்கவேண்டும் என்று இந்தப் பத்தி சுட்டிக்காட்டியிருந்தது. இந்த ஒற்றுமை முயற்சியில் இதுபோன்ற கருத்துகளை தவிர்ப்பதுதான், அதன் நோக்கத்துக்கு உதவும் என்பதை அனைவரும் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.!

**- ஊர்க்குருவி**




நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி ஆலய வருடாந்த திருவிழா நேற்று காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது...!

(படங்கள்: ஐ. சிவசாந்தன்)

# ஈ. பி. டி. பியின் தோளிலேறி ஆடுவதற்கு விட முடியாது!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். மாநகர சபையின் பாதீட்டு விவகாரத்தை வைத்து அரசியல் செய்யும் நோக்கம் ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக்கு இல்லை எனவும் அதே சமயம் ஈ. பி. டி. பியின் தோளில் ஏறி ஆடவும் விட முடியாது என்றும் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், ஈழமக்கள் ஜனநாயக கட்சி தமிழ் மக்களின் அபிவிருத்தி, அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்னைகள் தொடர்பில் தொடர்ந்து பயணித்துவரும் கட்சியாகும். அந்த வகையில் யாழ். மாநகர சபையின் பாதீட்டை வைத்து அரசியல் செய்யவேண்டிய நோக்கம் எமக்கு கிடையாது. ஆனால், எமது கட்சியின் ஆதரவில்லாமல் பாதீட்டை நிறைவேற்றவும் முடியாது.

கடந்த வாரம் யாழ்.மாநகர சபையின் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டபோது நாம் அதில் பங்கு கொள்ளவில்லை அதற்கு பல காரணங்கள் உண்டு. மாநகர முதல்வர் தெரிவில் எமது கட்சி ஆதரவை வழங்கிய நிலையில் சபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி விடயங்களில் எமது கட்சி புறக்கணிக்கப்படுகிறது. மாநகர சபையில் ஆதிக்கமுள்ள எமது கட்சிமீது தொடர்ச்சியாக இவ்வாறான செயல்பாடுகள் இடம்பெற்று வரும் நிலையில் தொடர்ந்தும் ஈ. பி. டி. பியின் தோளில் ஏறி ஆடுவதற்கு விடமுடியாது.

ஆகவே யாழ். மாநகர சபையின் எதிர்வரும் வரவு - செலவு திட்டத்தை ஆதரிப்பது தொடர்பில் என்னிடம் சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை பேசவில்லை. கட்சி அங்கத்தவர்களுடன் பேசினார்களோ தெரியவில்லை - என்றார். (ஐ)

## மார்கழி இசைவிழா இன்றைய நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். இந்திய துணைத் தூதரகம், நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல், யாழ். வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசைவிழா 2022இன் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

டான் தொலைக்காட்சி குழுமத்தின் ஊடக அனுசரணையில் நடக்கும் இந்த நிகழ்வு இன்று மாலை 4.45 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் மகிழ்வொளி ஏற்றலுடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்தை இந்தியா கோர்ணர் இசைப்பிரிவு மாணவர்கள் இசைப்பர், தொடர்ந்து வரவேற்பு நடனத்தை நல்லைக்கலா மந்திர் நடனாலயம் திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் வழங்குவார்.

மங்கல இசையில், இந்திய கலைஞர்களான மைசூர் கலாநிதி மஞ்சுநாத், நாகராஜ் சகோதரர்கள் மற்றும் சுமந்த் மஞ்சுநாத் ஆகியோர் வழங்குவர். தொடர்ந்து பாரதியார் பாடல் நாட்டிய சமர்ப் பணம் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தால் வெந்து தணிந்தது காடு இசைக்கப்படும்.

விரலிசை நாத வந்தனத்தை சாகித்திய வீணாலய வழங்கும் நாட்டிய நாடகத்தை யாழ். பல்கலைக்கழக சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புல கலைகள் பீட நடனத்துறை மாணவர்கள் வழங்குவர்.

(ஐ)



## யாழ். மாவட்ட படை தளபதி நேற்றுப் பதவியேற்றார்!

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். மாவட்ட படைகளின் கட்டளை தளபதியாக மேஜர் ஜெனரல் சுவர்ண போதோட்ட நேற்று புதன்கிழமை பதவியேற்றார்.

நேற்று காலை பலாலியில் உள்ள யாழ். மாவட்ட இராணுவ தலைமையகத்தில் இந்த பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது மத தலைவர்களின் ஆராதனைகள் மற்றும் இராணுவ அணிவகுப்பு மரியாதைகளும் இடம்பெற்றது. (ஐ)

## கடலாமை இறைச்சியுடன் காரைநகரில் ஐவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 29

கடலாமை இறைச்சியுடன் ஐந்து பேரை காரைநகர் - முல்லைப்புலவு பகுதியில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில், களபூமி காவலரண் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவர்களிடமிருந்து 25 கிலோ கடலாமை இறைச்சி கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஐவரையும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)



ஈழநாடு
Eelanadu
29.12.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கூட்டமைப்புக்கு புதிய தலைமை?

தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் தலைமையில் ஓரணியாக செயல்படுவதற்கு தயாராக இருப்பதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார். எதிர்காலத்தில் அனைவரும் கூட்டமைப்பாக தேர்தல்களை எதிர்கொள்ளுவது தொடர்பில், தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், அந்த முயற்சிகளில் பெரியளவில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. இந்த நிலையில் மாவையின் தலைமையை விக்னேஸ்வரன் ஆதரித்திருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் கட்சிகளை ஒருங்கிணைக்கக்கூடிய நிலையில் இல்லை. ஆகக் குறைந்தது அவரால் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகக்கூட செயல்பட முடியவில்லை. இந்த நிலையில் சம்பந்தன் அவர் வகித்துவரும் பொறுப்புக்களை பிறிதொருவரிடம் ஒப்படைக்க வேண்டுமென்னும் அபிப்பிராயங்கள் பல மட்டத்தினராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. திருகோணமலை தமிழரசு கட்சி மட்டத்தினர் மத்தியில்கூட அவ்வாறான அபிப்பிராயங்கள் உண்டு. அவர்கள் கட்சியின் தலைவரான மாவையிடம் அவ்வாறான வேண்டுகோளையும் முன்வைத்திருந்தனர். கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுவின் தலைவர் பொறுப்பை பிறிதொருவரிடம் ஒப்படைத்து கூட்டமைப்பை முன்கொண்டு செல்வதற்கு சம்பந்தன் உதவ வேண்டுமென்னும் அபிப்பிராயமும் உண்டு. ஆனால், அனைத்தும் அபிப்பிராயங்களாக மட்டுமே இருக்கின்றன. இந்த நிலையில் மாவையின் தலைமையில் எவ்வாறு தமிழ்த் தேசிய கட்சிகளை ஒருங்கிணைப்பது. அதேவேளை, சம்பந்தன் மாற்றங்களுக்கு இணங்காமல் கூட்டமைப்பும் ஏனைய கட்சிகளும் எந்த அடிப்படையில் இணைந்து செயல்பட முடியும்? அதேவேளை மாவையின் தலைமை எந்தளவு தூரம் தமிழரசு கட்சிக்கும் செல்வாக்குச் செலுத்துகின்றதென்பதும் இன்னொரு கேள்வி.

ஆனால், அனைவரும் ஏதோவொரு வகையில் ஓரணியாக தேர்தல்களை எதிர்கொள்வது கட்டாயமானது. 2020 தேர்தல் அனுபவம் தமிழ் தேசிய கட்சிகளுக்கு போதிய படிப்பினையை வழங்கியிருக்கின்றது. அந்தப் படிப்பினையின்படி தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களுக்குள் பலப்பரீட்சைக்கு முயற்சித்தால், அதன் பலன்களை ஏனைய கட்சிகளே அறுவடை செய்யும். கடந்த தேர்தலில் கூட்டமைப்பு மட்டும் பின்னடைவுகளை எதிர்கொள்ளவில்லை. மாறாக, மாற்று- தமிழ் தேசிய அணியாக தங்களை முன்னிலைப்படுத்திக் கொண்ட விக்னேஸ்வரன் தலைமையிலான அணியும் மோசமான தோல்வியை சந்தித்தது. கூட்டமைப்பின் மீதான அதிருப்தியை அறுவடை செய்த கட்சிகளில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியும் ஒன்றாகும்.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தின் வீழ்ச்சியே கூட்டமைப்பினதும் வீழ்ச்சியாகியது. ஒருவேளை ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் கூட்டமைப்பினர் முன்னெடுத்த விடயங்கள் வெற்றிபெற்றிருந்தால் கூட்டமைப்பு உச்சத்துக்கு சென்றிருக்கும். அவ்வாறானதொரு நிலைமையை கூட்டமைப்பு மீண்டும் எதிர்கொண்டிருக்கின்றது. மீண்டும், ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுகளில் ஈடுபடுவதற்கான இணக்கப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பேச்சுகளின் மூலம் குறிப்பிட்ட விடயங்கள் வெற்றிகொள்ளப்பட்டால், கூட்டமைப்பின் செல்வாக்கு மேலும் அதிகரிக்கும். ஒருவேளை முன்னர் இடம்பெற்றது போன்று மீளவும் எதனையும் அடைய முடியாமல் போனால், மீளவும் கூட்டமைப்பு சரிவுகளை எதிர்கொள்ள நேரிடும். இதனை கருத்தில் கொண்டே கூட்டமைப்பு செயல்பட வேண்டும்.

எல்லாவற்றையும் கையாள்வதற்கு ஓரளவாவது உறுதியானதோர் அரசியல் கட்டமைப்பு அவசியம். அதற்கு ஓரளவாவது ஒரு தலைமைத்துவம் அவசியம். அந்த ஓரளவு தலைமைத்துவத்தை மாவையினால் வழங்க முடியுமென்று கட்சிகள் அனைத்தும் கருத்தொருமித்தால் அதில் பிரச்னையில்லை. ஆனால், சம்பந்தன் விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பதில் கூட்டமைப்பின் கட்சிகளிடையே தெளிவான இணக்கப்பாடு இருக்க வேண்டும். மாவை சேனாதிசாரா கூட்டமைப்பின் தலைமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டால்தான் வெளியிலிருப்பவர்களை அவரால் ஒருங்கிணைக்க முடியும்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மொழிபெயர்ப்பு தின கொண்டாட்டம்!



*யாழ்ப்பாணம், டிசெ. 29*

*யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் மொழிபெயர்ப்பு தினமும் புத்தக வெளியீடுகளும் இடம்பெற்றன.*

*2017 ஆம் ஆண்டில் ஐ.நா சபையானது உலக நாடுகளை இணைக்கவும் நாட்டின் அமைதி மற்றும் சமாதானத்தைப் பேணுவதற்கு உதவிபுரிபவர்களாகவும் விளங்கும் மொழிபெயர்ப்பாளர்களை கொண்டாடும் விதமாக செப்ரெம்பர் 30ஆம் திகதியை சர்வதேச மொழிபெயர்ப்பு தினமாகப் பிரகடனப்படுத்தியது.*

*இந்த வருடம் “தடைகளற்ற உலகம்” எனும் தொனிப்பொருளில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினமானது உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டது.*

*யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தில் 2011ஆம் ஆண்டு மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையானது அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து தொடர்ந்து 10 வருடங்களாக கொண்டாடப்பட்டு வரும் இத்தினமானது இந்த வருடமும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையினால் கடந்த வியாழக் கிழமை வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது.*

*இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர், கௌரவ விருந்தினர்களாக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஆணையாளர் பிரசாத் ஹேரத் மற்றும் தேசிய மொழி சமத்துவ பிரதி ஆணையாளர் திருநாவுக்கரசு மாரிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*இந்நிகழ்ச்சியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஆக்கங்களுக்கு பணப்பரிசில்களும் ஆவன மற்றும் கவிதை மொழிபெயர்ப்பின் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத்தின் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையின் பட்டதாரிகள் மூவரால் மூன்று புத்தகங்களும் வெளியிடப்பட்டன. (ஐ)*

# சமத்துவ கட்சியின் வன்னி பணிமனை வவுனியாவில் நேற்று திறந்துவைப்பு!





*வவுனியா, டிசெ. 29*

*சமத்துவக் கட்சியின் வன்னி தலைமை அலுவலகம் நேற்று வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வவுனியா நகரில் சென் அன்ரனி ஒழுங்கை, கந்தசுவாமி கோவில் வீதியில் 1454/1 முகவரியில் குறித்த அலுவலகம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.*

*சமத்துவக் கட்சியின் தவிசாளர் சு. மனோகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பெயர் பலகையை கட்சியின் தவிசாளர் திரை நீக்கம் செய்து வைக்க, அலுவலகத்தை கட்சியின் பொதுச் செயலாளர் முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.*

*இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வவுனியா தெற்கு பிரதேச சபையின் தவிசாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிசோர், தமிழர் ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சுகு சிறிதரன் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நடராஜன், கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள், மத்திய குழு உறுப்பினர்கள், அமைப்பாளர், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 29 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 14
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சப்தமி




**மேடம்**
நீங்கள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். நண்பர்களின் உதவி நலம் தரும். ஆதாயமான நாள். குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள் பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்**
புதிய வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். வருமானம் அதிகரிக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். உயர் நிலையில் இருப்பவரின் உதவியுடன், முயற்சி ஒன்றில் வெற்றி பெறுவீர்கள்.

**மிதுனம்**
வருமானத்திற்குரிய வழிகளைக் கண்டறிவீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும். செயல்களில் இருந்த தடை விலகும். முயற்சியில் ஆதாயம் காண்பீர்கள். நிதிநிலை உயரும்.

**கடகம்**
அலைச்சல் அதிகரிக்கும். மனம் சோர்வடையும். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். பயணத்தில் கவனம் தேவை.எதிர்பாராத சங்கடத்திற்கு ஆளாவீர்கள். மனதில் குழப்பம் அதிகரிக்கும்.

**சிம்மம்**
உற்சாகத்துடன் செயல்படுவீர்கள்.உங்களது எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

**கன்னி**
செல்வாக்கு உயரும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். செயல்களில் உண்டான தடைகள் விலகும். பொதுநலனில் அக்கறை கொள்வீர்கள். உங்கள் பணி மற்றவர்களால் பாராட்டப்படும்.

**துலாம்**
பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் வாக்கு வாதங்களில் ஈடுபட வேண்டாம். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள்.பயணத்தால் ஆதாயம் காண்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். நட்பால் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த வருவாய் உண்டு. உறவினர்கள் உங்களது உதவியை தேடி வருவார்கள்.

**தனுசு**
நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். உறவினர்கள் வழியே நலம் காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.வேலை தேடியவர்களுக்கு அதற்குரிய வாய்ப்பு வரும். முயற்சி வெற்றியாகும்.

**மகரம்**
எதிர்கால வாழ்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள். குடும்பத்தினர் உங்களைக் கொண்டாடுவார்கள். பண வருவாய் அதிகரிக்கும்.நண்பர்கள் உதவியுடன் தொழிலில் ஏற்பட்ட பாதிப்பை சரி செய்வீர்கள்.

**கும்பம்**
கடந்த கால அனுபவங்களைக் கொண்டு உங்களது வளர்ச்சிக்கு வழி காண்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். பழைய பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். நிதி நிலை உயரும்.

**மீனம்**
எதிர்பார்த்த செய்தி வீடு வந்து சேரும். விஐபிகளின் ஆதரவால் புதிய பாதை தெரியும்.செலவுகளைக் கட்டுப்படுத்துவது பற்றி சிந்திப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்புண்டாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

# தமிழ்நாட்டில் புலிகள் அமைப்புக்கு புத்துயிர் கொடுக்கிறது பாகிஸ்தான்!

## புதுடில்லி பத்திரிகை சொல்கிறது

சென்னை, டிசெ. 29

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு புத்துயிர் அளிக்கும் நடவடிக்கைகளில் பாகிஸ்தானின் புலனாய்வு பிரிவான ஐ. எஸ். ஐ. ஈடுபட்டுள்ளது என தமிழக ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு புத்துயிர் அளிக்கும் நடவடிக்கைகளில் பாகிஸ்தானின் புலனாய்வு பிரிவு ஈடுபட்டுள்ளது என ரிபப்ளிக் வேர்ள்ட் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் அளிக்க முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இந்தியாவின் தேசிய விசாரணை முகவர் அமைப்பு 9 பேரை கைது செய்துள்ள நிலையிலேயே இந்த செய்தி வெளியாகியுள்ளது.

இலங்கையின் போதைப் பொருள் கடத்தல் கும்பலை சேர்ந்த குணசேகரன் புஸ்ப ராஜா என்ற இருவர் பாகிஸ்தானை சேர்ந்த ஆயுத போதைப் பொருள் விற்பனையாளர் ஹாஜி சலீம் என்பவருடன் இணைந்து செயல்பட்டனர் என இந்தியாவின் தேசிய விசாரணை முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் செயல்பட்டுள்ளனர் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்காக போதைப்பொருள் ஆயுதங்களை கடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என ரிபப்ளிக் வேர்ள்ட் தெரிவித்துள்ளது.

இந்திய அமைப்பு இவர்களை கைதுசெய்துள்ள அதேவேளை பிராந்தியத்தில் அமைதி பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காக பாகிஸ்தான் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு புத்துயிர் அளிக்க முயல்கின்றது என இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# சிதம்பரம் ஆருத்ரா தரிசன விழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது!



சிதம்பரம், டிசெ. 29

உலகப் பிரசித்தி பெற்ற சிதம்பரம் நடராஜர் கோயிலில் மார்கழி ஆருத்ரா தரிசன விழா நேற்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமந் நடராஜமூர்த்தி வீற்றுள்ள சித்சபை எதிரே உள்ள கொடி மரத்தில், பஞ்சமூர்த்திகள் முன்னிலையில், சுவாமியின் பிரதிநிதியான ஹஸ்தராஜரை முன்னிறுத்தி ஆவாஹணம் செய்து புதன்கிழமை காலை 7 மணிக்கு உற்சவ ஆச்சாரியார் சு. ரா. நடராஜகுஞ்சிதபாத தீட்சிதர் ரிஷபக் கொடியை ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசித்தனர். சிதம்பரம் ஏஎஸ்பி ரகுபதி தலைமையில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தொடர்ந்து 10 நாட்கள் பஞ்சமூர்த்தி வீதி உலா உற்சவம் நடைபெறுகிறது.

ஜனவரி 5ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், இரவு 8 மணிக்கு ஆயிரங்கால் முன் முகப்பு மண்டபத்தில் ஏககால இலட்சார்ச்சனை நடைபெறுகிறது. 6ஆம் திகதி அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்பு அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரை சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமந் நடராஜ மூர்த்திக்கு மகாபிஷேகமும் நடைபெறுகிறது. பின்னர் காலை 10 மணிக்கு சித் சபையில் ரகசிய பூஜையும், பஞ்சமூர்த்திகள் வீதி உலா வந்த பின்னர் பிற்பகல் 3 மணிக்கு மேல் மார்கழி ஆருத்ரா தரிசனமும், ஞானகாச சித்சபா பிரவேசமும் நடைபெறும். 7ஆம் திகதி சனிக்கிழமை பஞ்சமூர்த்திகள் முத்துப்பல்லக்கு வீதி உலாவுடன் உற்சவம் நிறைவடைகிறது.

(ஐ)

# தமிழகம் பாதுகாப்பான கரங்களில் இல்லை

## பா. ஜ. க. கட்சி சொல்கிறது



சென்னை, டிசெ. 29

தமிழ்நாடு பாதுகாப்பான கரங்களில் இல்லை என பாரதிய ஜனதா கட்சியின் நாடாளாவிய தலைவர் ஜெ. பி. நட்டா விமர்சித்துள்ளார்.

கோவையில் பா. ஜ. க. பொதுக்கூட் டம் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பான கரங்களில் இந்திய நாடு இருக்கிறது. ஆனால், தமிழ்நாடு பாதுகாப்பான கரங்களில் இல்லை என்பது பயமாக உள்ளது. நாட்டில் ஒரு சதவீதத்திற்கும் கீழ் ஏழ்மை குறைந்துள்ளது. தமிழ்நாட்டுக்கு16 மருத்துவக் கல்லூரிகளை வழங்கி மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பை பிரதமர் மோடி வலுபடுத்தி இருப்பதாக குறிப்பிட்டார்.

காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தியின் ஒற்றுமை நடைபயணத்தை விமர்சித்த ஜெ. பி.நட்டா, நடைபயணம் நாட்டை ஒன்றிணைக்கவா அல்லது பிரிக்கவா என கேள்வி எழுப்பினார்

(ஐ)

# தமிழர்களுக்கு அதிகளவு வாய்ப்புகளை உறுதி செய்க!

## முதலமைச்சர் ஸ்டாலின் வலியுறுத்து



சென்னை, டிசெ. 29

தமிழ்நாட்டைச் சேர்ந்த ணவர்களுக்கான வாய்ப்புகளை, ஒன்றிய அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் பணி நியமனங்களில் உறுதி செய்திட வலியுறுத்தி ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டிலுள்ள ஒன்றிய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பணி நியமனங்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கான வாய்ப்புகளை உறுதி செய்திடவேண்டுமென்று வலியுறுத்தி, பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல மைச்சர் மு. க. ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில், நாட்டில் அனைத்துப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கும் போதுமான வாய்ப்புகள் வழங்குவதன் மூலம் மட்டுமே சிறந்த சேவை வழங்குவதை உறுதி செய்திட முடியும் என்றும், ஒன்றிய அரசு மற்றும் ஒன்றிய பொதுத் துறை நிறுவனங்களில் சேருவதற்கான அவர்களது விருப்பத்தை நிறைவேற்ற முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மின் கட்டணம் உயர்ந்தால் அரசைத் தோற்கடிப்போம்!

## தொழிற்சங்கக் கூட்டமைப்பு எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ.29**

**பொதுமக்கள் நெருக்கடியில் உள்ள இந்த சமயத்தில், மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும் விதமாக மின்சாரக் கட்டணத்தை மேலும் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்தால், அதனை ஒட்டுமொத்த மக்களையும் இணைத்து தோற்கடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.**

மீண்டும் மின்கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்றும், சட்ட விரோதமாக மின் கட்டணத்தை உயர்த்தினால், கட்டணம் செலுத்த முடியாமல் உள்ள வாடிக்கையாளர்களின் மின் இணைப்பை துண்டிக்காமல் இருக்க தங்கள் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் தீர்மானிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 75 வீத மின் கட்டண அதிகரிப்பால் சிறு தொழிலதிபர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் மாத்திரமன்றி ஒட்டுமொத்த மக்களும் கடுமையான பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மீண்டுமொரு மின் கட்டண அதிகரிப்புக்கு அமைச்சரவையும் எதிர்ப்பு வெளியிட்டதாகவும், ஆனால் ஜனாதிபதியும் மின்சக்தி அமைச்சரும் மக்கள் பிரச்னைகளில் அக்கறையின்றி செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# யாழ்ப்பாணம் வந்த லொறி மோதியதில் இருவர் மரணம்!



கொழும்பு, டிசெ. 29

பாதெனிய அனுராதபுரம் பிரதான வீதியில் தம்புத்தேகம கொன்வெவ பிரதேசத்தில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளதாக தம்புத்தேகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கமுவ, மஹகல்கடவல பிரதேசத்தை சேர்ந்த 21 வயதான தேஷான் மலிந்த மற்றும் கல்கமுவ, களுந்தேவ பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த லொறியொன்றும் தலாவயிலிருந்து தம்புத்தேகம நோக்கி பயணித்த ஓட்டோவும் தம்புத்தேகம கொன்வெவ பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் கூறினர்.

பிரபல சவர்க்கார தொழிற்சாலை ஒன்றில் பணி புரிந்து வந்த ஊழியர்கள் நால்வரே தமது பணியை முடித்துக் கொண்டு ஓட்டோவில் பயணித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த இந்த நால்வரும் தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளதாகவும், படுகாயமடைந்த மற்றைய இருவர் தம்புத்தேகம வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தம்புத்தேகம தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் வவுனியா இளைஞன் கைது

வவுனியா, டிசெ. 29

வவுனியாவில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து,

வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் விசேட நடவடிக்கை ஒன்றை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர். இதன்போது மோட்டர் சைக்கிள் ஒன்றில் ஐஸ் போதைப் பொருளுடன் சென்ற ஒருவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டதுடன், அவரிடம் இருந்து ஐந்தாக பொதி செய்யப்பட்ட நிலையில் 20 கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது. (அ)

# கிளிநொச்சி புதிய பஸ் நிலையம் விரைவில் மக்களிடம் கையளிப்பு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நடவடிக்கை



கொழும்பு, டிசெ. 29

நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கிளிநொச்சி புதிய பஸ் நிலையம் விரைவில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. இது தொடர்பான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்த பஸ் நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை 94 மில்லியன் ரூபா ஆகும். 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனம் இதன் ஒரு பகுதியில் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டது. பின்னர், நகர அபிவிருத்தி அதிகார சபை இங்கு 2020 இல் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து 2022 மே மாதம் நிறைவு செய்தது. வடக்கு மாகாண சபைக்குச் சொந்தமான காணியில் இது நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி புதிய பஸ் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இதுவரை மக்களிடம் கையளிக்கப்படவில்லை என அண்மையில் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பில் தெரியவந்துள்ளது.

அங்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இந்த புதிய பஸ் நிலையத்தை மக்களிடம் கையளிக்க உடனடியாக ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்தப் புதிய பஸ் நிலையம் பல மாதங்களாக திறக்கப்படாமல் உள்ளதால் தற்போது பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

அண்மைக்கால பொருளாதார நெருக்கடியால், அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இதன்படி, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தத் திட்டங்களை வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் தொடங்க அமைச்சர் ஏற்கனவே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (அ)

# திகாம்பரம், ஜீவன், இராதாகிருஷ்ணன் சொத்து விவரத்தை வெளியிட எதிர்ப்பு!

கொழும்பு, டிசெ. 29

நுவரெலியா மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான், இராதாகிருஷ்ணன் ஆகியோர் தங்களது சொத்து விவரங்களை வெளியிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக நுவரெலியா மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழான விண்ணப்பம் ஒன்றுக்கு, நுவரெலியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கே.ஏ.எல்.எஸ்.கலுகம்பிடிய கையெழுத்திட்டு 25.10.2022 என திகதி குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்ட பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான், வே.இராதாகிருஸ்ணன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மயில்வாகனம் திலகராஜ் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அமரர்களான ஆறுமுகன் தொண்டமான், முத்து சிவலிங்கம் ஆகியோரது சொத்து விவரங்கள், கல்வி தகைமைகள் உள்ளிட்டத் தகவல்களை வழங்கக் கோரி 02.10.2022 அன்று நுவரெலியா மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்கு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்டது.

வழங்கப்பட்ட பதில் கடிதத்தில், அமரர் ஆறுமுகன் தொண்டமான் 1994, 2001, 2004, 2010, 2015ஆம் ஆண்டுகளில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டுள்ளார். முத்துசிவலிங்கம் 1994, 2001, 2004, 2010, 2015 ஆம் ஆண்டுகளில் பொதுத்தேர்தலில் போட்டியிட்டுள்ளார். பழனி திகாம்பரம் 2004, 2010, 2015, 2020ஆம் ஆண்டுகளிலும், வே.இராதாகிருஷ்ணன் 1999, 2004, 2009, 2015, 2020ஆம் ஆண்டுகளிலும், மயில்வாகனம் திலகராஜ் 2015ஆம் ஆண்டும், ஜீவன் தொண்டமான் 2020ஆம் ஆண்டும் பொதுத்தேர்தலில் போட்டியிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளின் கல்வித் தகவல்கள் வேட்புமனுக்களில் சேர்க்கப்படாததால் “தேர்தல் ஆணையகத்திடம் அரசியல்வாதிகளின் கல்வி தகவல்கள் இல்லை” எனவும் பதில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் “தகவலறியும் உரிமைச் சட்ட விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள “சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள்” தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் அனுமதியுடனேயே வழங்கப்பட வேண்டும். எனவே சொத்துகள் மற்றும் பொறுப்புகளை வழங்குவதற்கு அவர்களின் அனுமதி எதிர்காலத்தில் கோரப்பட்டு, அனுமதி கிடைத்தால் மாத்திரமே அந்தத் தகவல்கள் வழங்கப்படும்” எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தவலறியும் உரிமைச் சட்டத்தின் 3(1) 5ஆம் பிரிவின்படி இலங்கை பிரஜைகள் ஒவ்வொருவரும் ஒரு பகிரங்க அதிகார சபையின் உடமையில், கட்டுப்பாட்டில், உள்ள தவல்களை பெற்றுக்கொள்வதற்கான உரிமை இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, உதவித் தேர்தல் ஆணையாளர் கே.ஏ.எல்.எஸ்.கலுகம்பிடிய வழங்கிய தவல்களில் திருப்தி இல்லை என்பதால் இது தொடர்பில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேன்முறையீட்டுக்கு 14.11.2022 என திகதி குறிப்பிடப்பட்டு சிங்கள மொழியில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், “நீங்கள் கோரியிருக்கும் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட நபர்களின் அனுமதியுடனேயே வழங்கப்படவேண்டும் என்பதால், அவர்களின் அனுமதி கோரப்பட்டது.

இதன்படி, சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்களை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். எனவே, சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்களை வழங்க முடியாது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமையவே தகவல்களை வழங்குவதற்கு மறுப்பு தெரிவிக்க முடியும். ஆனால் இதனை எதனையும் குறிப்பிடாமல் தகவல்களை வழங்குவதற்கு நுவரெலியா மாவட்ட தேர்தல் ஆலுவலகம் மறுத்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், எம்.கே சமன் ஸ்ரீ ரத்நாயக்கவுக்கு 28.11.2022 அன்று மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள போதிலும் இதுவரை பதில் கிடைக்கவில்லை என்பதால் தகவலறியும் ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அம்பிட்டிய விபத்தில் 7 வயதுச் சிறுமி பலி!

கொழும்பு, டிசெ. 29

அம்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். பஸ்ஸும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 7 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார்.

கஹட்டருப்ப - பதுளை வீதியில் அம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவின் பின் ஆசனத்தில் பயணித்த மூன்று சிறுமிகள் காயமடைந்து கந்த கொல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த 7 வயதுச் சிறுமி மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றைய இரு சிறுமிகளும் கந்தகொல்ல வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# மின்வெட்டு என மக்களை மிரட்டி கட்டணத்தை உயர்த்த முயற்சி!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 29

மின்வெட்டு என மக்களை அச்சுறுத்தி மின்சார கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

முதலில் இலங்கை மின்சார சபை தனது குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் நிலக்கரி கொள்வனவு செய்ததில் முரண்பாடுகள் இருந்ததை எரிசக்தி அமைச்சின் செயலாளரும், கேள்விக் குழுவின் தலைவரும் பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் கூட்டத்தின்போது ஒப்புக் கொண்டார்.

இவ்வாறான பிரச்னைகளுக்கு தீர்வு காணாமல், மக்கள் மீது மேலும் சுமையை ஏற்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

டீசல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அதிக கட்டணத்தைச் செலுத்துவதற்கு இலங்கை மின்சார சபை நிர்ப்பந்திக்கப்பட்டால், மாதாந்தம் 180 மற்றும் 300 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் பாவனையாளர்களே அத்தகைய செலவுகளை ஏற்கவேண்டும்.

கட்டண உயர்வால் சராசரி மக்கள் மேலும் சுமையாக இருக்கக் கூடாது-என்றார்.

இலங்கை மின் சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன, அதிக உற்பத்திச் செலவை ஈடு செய்யும் வகையில், அடுத்த வருடம் 60 முதல் 65 வீதம் வரை மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# 60 ரயில் கடவைகள் பாதுகாப்பற்றவை!

கொழும்பு, டிசெ. 29

மணி மற்றும் ஒளி சமிக்ஞைகளுடன் கூடிய கிட்டத்தட்ட 60 ரயில் கடவைகள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக ரயில்வே சிக்னலிங் உப திணைக்களத்தின் பிரதான பொறியியலாளர் சிந்தக ஜயசேகர தெரிவித்தார்.

430 மணி மற்றும் ஒளி சமிக்ஞைகள் உள்ளன. ஆனால் கிட்டத்தட்ட 60 சமிக்ஞை இயந்திரங்கள் உடைந்துள்ளன என்று தலைமை பொறியாளர் கூறினார்.

கரையோர வீதிகள் மற்றும் புத்தளம் வீதியில் அதிகளவான கடவைகளில் இந்த ஆபத்தான நிலை காணப்படுவதாகவும், நடைமுறை சமிக்ஞைகளை பயன்படுத்தி ரயில்களை இயக்குவதற்கு ரயில்வே ஊழியர்கள் பணியமர்த் தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்த பழுதடைந்த சிக்னல்களை புனரமைக்கும் பணிகளும், சிக்னல் அமைப்பை நவீனப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

மேலும், ரயில் பாதைகள் உட்பட ரயில் வீதிகளில் சிக்னல் கேபிள்களை போதைப் பொருள் வியாபாரிகள் துண்டிப்பதாலேயே சிக்னல் கோளாறுகள் ஏற்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் விசேட கவனம் செலுத்தி நாசகாரர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# கட்டுமானப் பொருள்கள் ஏற்றிச்செல்லும் அனுமதிப் பத்திர முறையில் மாற்றங்கள்

மணல், கல், மண் மற்றும் களிமண் ஆகியவற்றை கொண்டு செல்வதற்கான புதிய அனுமதிப் பத்திர முறையொன்று எதிர்வரும் 02ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மணல், கல் மற்றும் மண் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரங்களில் வாகன இலக்கம் மற்றும் பொருட்கள் கொண்டு செல்லப்படவேண்டிய வீதி என்பன உள்ளடக்கப்படாமையால் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் பிரேம் தெரிவித்தார்.

சுற்றாடல் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட விசேட கண்காணிப்பை அடுத்து, எதிர்வரும் 02ஆம் திகதி முதல் அனைத்து போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களிலும் வாகன இலக்கம், போக்குவரத்துப் பாதை உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார். (அ)

# மத ஸ்தலங்களுக்கு சூரிய சக்தி மின்கலம்

கொழும்பு, டிசெ. 29

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் அனைத்து மத தலங்களுக்கும் மூன்று மாத காலத்துக்குள் சூரிய சக்தி கலன்கள் இலவசமாக வழங்கப்படும் என வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின் கட்டண அதிகரிப்பால் பௌத்த விகாரைகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளதாகவும், பௌத்த மதச் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஒரு சில பிக்குகள் தொடர்ந்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வரும் நிலையில், அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த செயற்திட்டம் இன்னும் மூன்று மாத காலத்துக்குள் செயற்படுத்தப்படும் எனவும் காஞ்சன விஜேசேகர கூறினார்.

## இலங்கையர்கள் உட்பட

# 27 வெளிநாட்டவர்கள் ருமேனியாவில் கைது!

கொழும்பு, டிசெ. 29

இலங்கை, பங்களாதேஷ், எரித்திரியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 27 புலம்பெயர்ந்தோர் ருமேனியாவின் அராட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அவர்கள் சட்டவிரோதமாக எல்லையை கடந்து ஹங்கேரிக்குச் செல்லும் நோக்கில் புடைவைத் துணிகள் மற்றும் உலோக கம்பிகள் ஏற்றப்பட்ட இரண்டு கனரக வாகனத்துக்குள் மறைந்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

ருமேனியாவின் நட்லாக் எல்லையில் கனரக வாகனமொன்று பொலிஸாரால் சோதனையிடப்பட்டது. அதில், சரக்கு கொள்கலனின் முன் பகுதியில் இருந்த ஒரு சிறப்பு பெட்டியில், மறைந்திருந்த 17 வெளிநாட்டினர் கண்டுபிடிக்கப்பட்டனர்.

அவர்கள் மேலதிக விசாரணைக்காக அராட் பொலிஸ் தலைமையகத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்கள் 21 முதல் 67 வயதுடைய பங்களாதேஷ் மற்றும் எரித்திரிய நாட்டவர்கள் எனக் கண்டறியப்பட்டது.

இதேவேளை, பொலிஸாரால் உலோகக் கம்பிகள் ஏற்பட்ட மற்றுமொரு கனரக வாகனம் சோதனையிடப்பட்டது. அதன்போது, அதில் மறைந்திருந்த இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 21-42 வயதுக்கு இடைப்பட்ட 10 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சட்டவிரோத நடவடிக்கை குறித்து மேலதிக தகவல்களை கண்டறிய விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ருமேனிய பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மரக்கறிகள் ஏற்றிச்செல்ல ஜனவரி முதல் புதிய ரயில்

கொழும்பு, டிசெ. 28

மரக்கறிகளை ஏற்றிச்செல்வதற்காக அடுத்த மாதம் முதல் புதிய ரயிலொன்றை சேவையில் ஈடுபடுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

குறித்த ரயிலின் பரீட்சார்த்த போக்குவரத்து நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தினால் மரக்கறிகளை ஏற்றிச் செல்வதற்காக ஏற்படும் அதிக செலவு மற்றும் போக்குவரத்தின் போது மரக்கறிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைப்பதற்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# 7 நிலக்கரிக் கப்பல்கள் ஜனவரி இலங்கை வரும்

கொழும்பு, டிசெ. 29

ஜனவரி மாதம் 07 கப்பல்கள் ஊடாக நிலக்கரிகளை பெற்றுக் கொள்ள 30 சதவீத முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. முதலாவது நிலக்கரி கப்பல் அடுத்த மாதம் 05 ஆம் திகதி நாட்டை வந்தடையும் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி துறை அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனல் மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரி தட்டுப்பாடு, நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடைவதற்கு ஏற்பட்டுள்ள தாமதம் ஆகிய காரணங்களால் தற்போது இரண்டரை மணித்தியால மின்விநியோக தடை அமுல்படுத்தப்படுகிறது. எதிர்வரும் 31,2023 ஜனவரி முதலாம் திகதி மின் விநியோகத் துண்டிப்பு இடம்பெறாது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் பணிகளுக்கான நிலக்கரி இம்மாதத்துடன் நிறைவு பெறும் என தொழிற்சங்கத்தினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது. ஜனவரி மாதம் 08 ஆம் திகதி வரை நிலக்கரி களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் மாத்திரம் 7 கப்பல்கள் ஊடாக நிலக்கரிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலாவது நிலக்கரி கப்பல் எதிர்வரும் மாதம் 05ஆம் திகதி நாட்டை வந்தடையும். இந்த கப்பலில் தரையிறக்கப்படும் 60,000 மெற்றிக்தொன் நிலக்கரி நுரைச்சோலை அனல் மின்நிலையத்திற்கு அன்றைய தினமே அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாவது நிலக்கரி கப்பல் எதிர்வரும் ஜனவரி மாதம் 09 ஆம் திகதி, மூன்றாவது நிலக்கரி கப்பல் எதிர்வரும் 16ஆம் திகதி நாட்டை வந்தடையும். ஜனவரி மாதம் 7 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடையும். நிலக்கரி கப்பல்களுக்கான 30 சதவீத முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. மிகுதி 70 சதவீத கட்டணத்தை செலுத்த இலங்கை மின்சார சபை, இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளன.

அரசியல் விவகாரங்களில் முழுமையாக தடையிடும் ஓமல்பே சோபித தேரர் புத்தசாசனத்தை பாதுகாக்கும் விடயங்களில் தலையிடுவதில்லை. பாலி மற்றும் புத்தசாசன பல்கலைக் கழகத்தின் தற்போதைய நிலை தொடர்பில் அவர் இதுவரை அறியவில்லை- என்றார். (அ)

# உரப் பற்றாக்குறைக்கு அதிகாரிகளே காரணம்

## அமைச்சர் அமரவீர கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 29

அரச அதிகாரிகள் விவசாயிகளிடம் உரம் பற்றாக்குறையாக இருப்பதாகக் கூறுவதனால் அரசாங்கத்திற்கே அபகீர்த்தி ஏற்படுவதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்

உரங்களின் இருப்பு தொடர்பில் ஆராய்வதற்காக களஞ்சியங்களுக்கு விஜயம் செய்த போதே அவர் செய்தியாளர்கள் மத்தியில் இந்த கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாயத்துக்கு தேவையான உரம் முறையாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதா என்று களஞ்சியங்கள் மற்றும் ஆவணங்களைப் பரிசோதித்தபோது எனக்கு உண்மை நிலவரம் தெரியவந்தது. விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகள் சிலர் தமக்கு உரம் கிடைக்கவில்லை என்று விவசாயிகளிடம் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் விவசாய அமைப்புகள் எனது கவனத்திற்கு கொண்டு வந்திருந்தன. இதன்படி ஆவணங்களை பரீட்சித்தபோது அனைத்துப் பகுதிகளுக்கும் தேவையான உரம் விநியோகிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

உரங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுமானால் துறைசார்ந்த அதிகாரிகளின் அசமந்த போக்கே காரணமாக இருக்க முடியும்.

எனவே, குறித்த அதிகாரிகளுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கம் எந்தளவிற்கு முயற்சிகளை மேற்கொண்டாலும் விவசாயிகளுக்குரிய பிரதி பலன் கிடைக்காத பட்சத்தில் அதில் எந்தவித பயனும் இல்லை.

பிரதேச ரீதியாக விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யாத அதிகாரிகள் தமது அரச கருமங்களில் தவறிழைப்பதாகவே நாங்கள் கருதுகிறோம்-என்றார். (அ)

# பனை அபிவிருத்திச் சபையில் 38 மில்லியன் ரூபா நிதி மோசடி!

## பிரதிப் பொது முகாமையாளர் கணக்காய்வாளர் சேவை நீக்கம்

கொழும்பு, டிசெ. 29

பனை அபிவிருத்திச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் கணக்காய்வாளர் ஆகியோர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இருவரும் சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராஜ தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபையில் இடம்பெற்ற 38 மில்லியன் ரூபா நிதி மோசடி மற்றும் கடமையிலிருந்து தவறியமை ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் துறைசார் அமைச்சின் ஊடாக நடத்தப்பட்ட கணக்காய்வில் இவர்கள் குற்றவாளிகளாக கண்டறியப்பட்டுள்ளனர்.

பனங்கருப்பட்டி தயாரிப்புக்காக கொண்டுவரப்பட்ட இயந்திரத்தை எவ்வித பயன்பாடுமின்றி பழுதடைவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கூறியுள்ளார்.

பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் கணக்காய்வாளர் ஆகியோர் பனை அபிவிருத்திச் சபையில் சம்பளத்தை பெற்றுக்கொள்ளும் அதேநேரம், இரு பல்கலைக்கழகங்களில் பணியாற்றியுள்ளதுடன், அங்கும் சம்பளத்தை பெற்றுக்கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# இந்திய கடன் வசதியில் 'மை' வாங்கி தேர்தல் நடத்துவது குறித்து அவதானம்

கொழும்பு, டிசெ. 29

அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இந்தியா வழங்கும் கடன் வசதியின் கீழ், உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தேவையான விரல் பூச்சு (மை) இறக்குமதி செய்வது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், அதற்கு முன்னர் தற்போது ஆணைக்குழு வசம் உள்ள மை காலாவதியாகிவிட்டதா என பரிசோதிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஏற்கனவே அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திடம் அறிக்கை கோரியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு தலைவர் நிமல் புஞ்சிஹேவாவிடம் வினவியபோது, தற்போதுள்ளமை கையிருப்பு தேர்தலை நடத்த போதுமானதாக இல்லாததால், கட்டாயமாக இறக்குமதி செய்யவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், விரல் பூச்சு இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் தற்போதைய எல்லை நிர்ணய குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

முந்தைய ஆண்டுகளில் அவை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டாலும், கடைசியாக 2020 ஆம் ஆண்டு தேர்தலுக்காக குறித்த விரல் பூச்சுகள், உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து கடந்த அரசாங்க காலத்தில் இலங்கை மக்களுக்கு தேவையான எரிபொருள் இறக்குமதிக்காக இந்தியா 500 மில்லியன் டொலர் கடன் வசதியை வழங்கியது.

பின்னர், இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, உணவு, மருந்து, ஏற்றுமதி தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருட்கள் மற்றும் வேறு சில பொருட்களை வாங்குவதற்கு மேலும் ஒரு பில்லியன் டொலர் வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த கடன் வசதியின் கீழ் மருந்துகள் முறையாக கட்டளையிடப்படவில்லை என கோப் குழுவில் தெரியவந்துள்ளதுடன், அதில் இரும்பை இறக்குமதி செய்யும் முயற்சி இடம்பெற்று வருவதாக சிலர் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ)

# சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 29

இவ்வருடம் டிசெம்பர் 26 ஆம் திகதி வரை சுமார் 7 இலட்சத்துக்கும் அதிக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள், சுமார் 7 இலட்சத்து 20 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

இதுவரை வெளியாகியுள்ள தரவுகளின்படி, இம்மாதம் 26 ஆம் திகதி வரை 73 ஆயிரத்து 314 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இ. போ. ச. - தனியார் பஸ் சேவையினர் மோதல் வடமராட்சிக்கான போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தை செலுத்தி வந்தவர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சுவேலி நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தை செலுத்தி வந்தவர்களும் நேற்று முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் சில மணித்தியாலங்கள் தனியார் பேருந்து ஊடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை சாரதிமீது அச்சுவேலிப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் இ. போ. ச. சாரதியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அச்சுவேலி தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துநரை விசாரணைக்காக பொலிஸார் அழைத்து சென்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து தனியார் பேருந்து உரிமையாளர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் தனியார் பேருந்துகளை நிறுத்தி தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த 750 இலக்க வழித்தடம் பேருந்து சாரதியை அச்சுவேலி பேருந்து நிலையத்தில் நின்ற ஒருவர் தாக்கியுள்ளார்.

இதனை அடுத்து குறித்த இ. போ. ச. பேருந்து பொலிஸ் நிலையம் எடுத்து செல்லப்பட்டு பாதிக்கப்பட்ட சாரதியால் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகத்தில் இரண்டு தனியார் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனரை அச்சுவேலி பொலிசார் விசாரணைக்காக அழைத்து சென்றிருந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் குறித்த நபர்கள் விடுவிக்கப்பட்டனர். இதனையடுத்து தனியார் பேருந்து சேவைகள் வழமை போல் இடம்பெற்றன.

தொடர்ச்சியாக இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும் தனியார் பேருந்தை செலுத்துபவருக்கும் இடையில் ஏற்பட்ட போட்டியால் வேகமாக பயணித்து இரு தரப்புக்கும் இடையில் அடிக்கடி முறுகல் ஏற்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

பேருந்து சாரதிகள் பயணிகளின் உயிரைப் பணயம் வைத்து தமக்குள் போட்டி போட்டு ஓடுவதனைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-2)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்

துயர் .நெற்
THUYAR.NET

துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்

ஈழநாடு
Eelanadu

ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்

DAN NEWS

டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்

விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# 2022க்கு பிரியாவிடை:

## உலகை உலுக்கிய மனதில் நின்ற படங்கள்

- கெல்லி குரோவியர்



துருக்கியின் இஸ்தான்புல்லில் ஈரான் பெண்களுக்கு ஆதரவாக போராட்டம், செப்டம்பர் 2022

2022ஆம் ஆண்டு முடிவுக்கு வரவுள்ளது. இந்தாண்டு உலகையே உலுக்கிய 14 புகைப்படங்களை தேர்ந்தெடுத்து இங்கே வழங்குகின்றோம். பெட்ரோல் குண்டுகளை வைத்து யுக்ரேன் படையினர் சதுரங்கம் விளையாடுவது, ஹிஜாப் சட்டங்களுக்கு எதிரான ஈரான் பெண்களின் போராட்டம், ஸ்பெயின் மற்றும் அமெரிக்காவில் ஏற்பட்ட காட்டுத்தீ உட் பட பல முக்கியத்துவம் வாய்ந்த புகைப்படங்கள் இங்கே வழங்கப்பட்டுள்ளன.

சிலியின் இகிகேவில் சட்டவிரோத குடியேற் றத்திற்கு எதிரான போராட்டம், ஜனவரி 2022 நெடுஞ்சாலையில் சுட்டெரிக்கும் வெயிலுக்கு மத்தியில் நாற்காலியில் வண்ணக் குடை ஒன்றை பிடித்துக்கொண்டு ஒருவர் அமர்ந்திருக்கிறார். அவரது அருகில் எரிந்துகொண்டிருக்கும் டயர்களிலிருந்து புகை வெளியேறிக் கொண்டிருக்கிறது.

பொலிவியா எல்லைக்கு அருகில் வடக்கு சிலியில் அமைந்துள்ள இகிகேயில் சட்ட விரோத குடியேற்றத்திற்கு எதிராக ஒரு குழுவினரின் போராட்டங்களுக்கு மத்தியில், அசைக்க முடியாத அமைதியின் உதாரணமாக இவர் இருக்கிறார்.



சீனாவின் கடுமையான கொரோனா கட்டுப்பாடுகளை எதிர்த்து போராட்டம், நவம்பர் 2022

சீனாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட கடுமையான கோவிட் கட்டுப்பாடுகளை எதிர்த்து, வெற்றுத் தாள்களை முகத்திற்கு முன் ஏந்தி போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஷின்ஜியாங் மாகாணத்தில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில், கடுமையான கட்டுப்பாடுகள் இல்லாவிட்டால் இந்த விபத்து தடுக்கப்பட்டிருக்கும் எனக் கூறி இப்போராட்டம் நடத்தப்பட்டது. தங்கள் எதிர்ப்பை பொதுவெளியில் பகிரங்கமாக வெளிப்படுத்த அனுமதிக்கப்படாததை வெளிப்படுத்தும் வகையில் வெற்றுத் தாள்கள் போராட்ட வடிவமாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஈரானில் ஹிஜாப் ஆடை ஒழுங்குமுறையை அமலாக்கும் காவல்துறையால் கைது செய்யப்பட்ட மாசா அமினி என்ற 22 வயது பெண் செப்டம்பர் 16 அன்று போலீஸ் காவலில் உயிரிழந்தார். போலீஸ் காவலில் இருந்தபோது மாசா அமினி உடல் ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொண்டதால் கோமா நிலைக்கு சென்றதாக நேரடி சாட்சியங்கள் கூறுகின்றன.

இதைத்தொடர்ந்து ஈரானில் பெரும்பாலான பெண்கள் தங்கள் முடியை வெட்டி ஈரான் அரசுக்கு எதிரான தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். படத்தில் இருப்பவர் துருக்கியில் வாழ்ந்துவரும் ஈரான் பெண் நசிபே சம்சேய்.

ஈரானில் பெண்களின் போராட்டத்திற்கு ஆதரவாக இஸ்தான்புல்லில் உள்ள ஈரான் தூதரகம் முன்பு தன் முடியை வெட்டி எதிர்ப்பைப் பதிவு செய்த இந்த புகைப்படம் அச்சமயத்தில் வைரலானது.





அமெரிக்காவின் கலிபோர்னியாவில் ஏற்பட்ட காட்டுத்தீயால் அழிந்த வீடு, ஜூலை 2022

கலிபோர்னியாவில் கோடைக்காலத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயில் பல வீடுகள் தீக்கிரையாகின. ஜூலை மாத இறுதியில் மரிபோசா கவுண்டி மாகாணத்தில் ஒக் மரக்காடுகளில் ஏற்பட்ட காட்டுத்தீயால் சுமார் 200 கட்டிடங்கள் தீக்கிரையாகின. இந்த படம், காட்டுத்தீயால் அழிந்துபோன ஓர் வீட்டின் உட்பகுதியை காண்பிக்கிறது. அந்த வீட்டில் சாப்பாட்டு மேசை, நாற்காலிகள் தீயில் எரிந்த நிலையில் சில்ஹவுட்டாக காட்சியளிக்கிறது.



யுக்ரேன் தலைநகர் கீயவ்வில் பெட்ரோல் குண்டுகளை வைத்து சதுரங்கம் விளையாடும் படையினர், மார்ச் 2022

யுக்ரேன் மீதான ரஷ்ய படையெடுப்பு தொடங்கிய இரண்டு வாரங்களில், கிழக்கு கீயவின் புறநகர் பகுதியில் யுக்ரேன் பிராந்திய பாதுகாப்புப் பிரிவினர் பெட்ரோல் குண்டுகளை வைத்து சதுரங்கம் விளையாடும் புகைப்படம் வைரலானது. உறைய வைக்கும் குளிரில் அவர்கள் சதுரங்கம் விளையாடுகின்றனர்.

ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி எடுத்த கரீனா நெபுலா புகைப்படம், ஜூலை 2022

ஜூலை 2022 அன்று ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி எடுத்த கரீனா நெபுலாவின் புகைப்படத்தை நாசா வெளியிட்டது. கரீனா நெபுலா என்று அழைக்கப்படும் விண்முகில்கள், தூசியும், வாயுக்களும் அடங்கிய மேகக்கூட்டம் போன்ற பகுதி ஆகும். இந்த புகைப்படம் மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது.



நேபாளின் காத்மண்டுவில் நடைபாதையை சுத்தம் செய்யும் பௌத்த துறவிகள், பிப்ரவரி 2022

இளம் பௌத்த துறவிகள் காத்மண்டுவின் தென்கிழக்கில் உள்ள கோதாவரியில் அமைந்துள்ள பௌத்த மடாலயம் முன்பு நடைபாதை ஒன்றை சுத்தம் செய்கின்றனர்.



(மறு பக்கம் பார்க்க)



நள்ளிரவில் அமெரிக்காவுக்கு செல்லும் தஞ்சம்கோரிகள், சுடேட் மிகுல் ஆலேமான், மெக்ஸிகோ, ஜூன் 2022

மத்திய அமெரிக் காவிலிருந்து தஞ்சம் கோரிகள், நள்ளிரவில் டார்ச்லைட் வெளிச்சத்தில் அமெரிக்காவுக்கு ஆபத்தான பயணத்தை மேற்கொண்ட புகைப்படம் இது.



ட்விட்டர் அலுவலகத்தில் கைகழுவும் தொட்டி ஈலோன் மஸ்க், கலிஃபோர்னியா, அமெரிக்கா, அக்டோபர் 2022

உலகின் பெரும் பணக்காரர்களுள் ஒருவரான ஈலோன் மஸ்க், ட்விட்டர் அலுவலகத்திற்காக வாங்கிய புதிய கைகழுவும் தொட்டியை ஏந்திச் செல்லும் வீடியோவை பகிர்ந்திருந்தார்.

ராணி எலிசபெத்தின் இறுதி ஊர் வலத்தைப் பார்க்கும் இளவரசர் ஜார்ஜ், பிரிட்டன், செப்டம்பர் 2022

ராணி எலிசபெத் செப்டம்பர் 8 அன்று மறைந்த நிலையில், அந்த துயரத்தை வெளிப் படுத்தும் பல புகைப்படங்கள் வெளியாகின. தனது கொள்ளுப்பாட்டியான ராணி எலிச பெத்தின் இறுதி ஊர்வலத்தைப் பார்க்கும் இளவரசர் ஜார்ஜின் புகைப்படம் இது. விண்ட்சரை நோக்கி இறுதி ஊர்வலம் செல் லும்போது தொலைக்காட்சியில் ஒளிபரப் பப்பட்டதிலிருந்து எடுக்கப்பட்ட புகைப் படம் இது.





புதைபடிம எரிபொருள் பயன் பாட்டுக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவு, லண்டன், பிரிட்டன், ஜூலை 2022

புதைபடிம எரிபொருள் உற்பத்திக்கு புதிய உரிமங் களை அளிக்கக் கூடாது, அதன் உற்பத்தியை நிறுத்த வேண்டும் எனக்கோரி, பிரிட்டன் அர சாங்கத்தை வலியுறுத்திவரும் 'ஜஸ்ட் ஸ்டாப் ஆயில்' எனப் படும் சூழலியல் அமைப்பைச் சேர்ந்த இரு ஆதரவாளர்கள், நேஷனல் கேலரியில் உள்ள புகழ்பெற்ற ஓவியர் ஜான் கான்ஸ்டபிளின் ஓவியத்தைப் பிடித்திருக்கும் புகைப்படம்.

கிழக்கு ஆங்லியாவில் தாழ்வாக பறக்கும் விமானங் கள், கைவிடப்பட்ட கார்கள் மற்றும் பரந்து விரிந்த தார்ச் சாலை ஆகிய ஆக்கிரமிப்புகள், கான்ஸ் டபிளின் கனவை அழிப் பதாக சித்தரிக்கப்பட்டுள் ளது.

அமெரிக்க உச்ச நீதிமன்றம் முன்பு கருக்கலைப்பு உரிமைக்கான போராட்டம், வாஷிங்டன் டிசி, அமெரிக்கா, ஜூலை 2022

அமெரிக்காவில் கருக்கலைப்பு உரிமையை தேசிய அளவில் சட்டபூர்வமாக்கிய 50 ஆண்டுகால உத்தரவை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் ஜூலை மாதம் ரத்து செய்தது. இதைத்தொடர்ந்து, கருக்கலைப்பு உரிமைக்கு ஆதரவாக பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன.

அப்படி, சுதந்திர தினத்தன்று உச்ச நீதிமன்றம் முன்பு சாம் ஸ்கார் செல்லோ எனும் செயற்பாட்டாளர், ரத்தம் போன்று சிகப்பு நிற வண்ணப் பூச்சை தன் உடலில் ஊற்றிக்கொண்டு போராடிய புகைப்படம் நம்மை உலுக்குவதாக உள்ளது.





ஸ்பெயினின் கனிசாவில் ஏற்பட்ட காட்டுத்தீ, ஆகஸ்ட் 2022

ஸ்பெயினின் கனிசாவில் ஏற்பட்ட காட்டுத்தீயை அணைக்கும் முயற்சியில் தீய ணைப்புத்துறையினர் ஈடு பட்டுள்ள புகைப்படம். கடந்த மூன்று தசாப்தங்களில் ஏற்பட்ட மோசமான காட்டுத்தீயாக இது கருதப்படுகிறது. புகைப்படத்தில் உள்ள காட்டுத்தீ ஒரு டிராகனை பிரதிபலிப்பதாக உள்ளது.



உலகக்கோப்பையை வென்றதை கொண்டாடும் லியோனெல் மெஸ்ஸி மற்றும் அர்ஜென்டினா அணியினர், கத்தார், டிசம்பர் 2022

கால்பந்து உலகக்கோப்பையை வென்ற பின்னர் லியோனெல் மெஸ் ஸியை அர்ஜென்டினா அணியினர் தங்களின் தோள்களில் சுமந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் புகைப்படம்.

# பிளாஸ்ரிக் போத்தல்களை பயன்படுத்தி கிறிஸ்மஸ் மரம்!

கொழும்பு, டிசெ. 29

பிளாஸ்ரிக் போத்தல்களை மாத்திரம் பயன்படுத்தி அமைக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரம் வெள்ளவத்தை கடற்கரையில் தொடர்ந்து நான்காவது வருடமாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

12 அடி உயரம் கொண்ட இந்த கிறிஸ்துமஸ் மரம் கடற்கரையில் இருந்து சேகரிக்கப்பட்ட 1500 பிளாஸ்ரிக் போத்தல்களைப் பயன்படுத்தி செய்யப்பட்டது.

பியர்ல் ப்ரொடெக்டர்ஸ், ஐ. ஐ. டியின் றோட்டரக்ட் கழக உறுப்பினர்கள், ஆஷா அறக்கட்டளை மாணவர்கள் இணைந்து, ஜீரோடிராஷ் நிறுவனத்துடன் இணைந்து இந்த ஆண்டு மரத்தை அமைத்துள்ளனர். .

அதிகரித்து வரும் பிளாஸ்ரிக் மாசுபாடு காரணமாக இலங்கையின் கடல் சூழல் எதிர்கொள்ளும் சவால்களை வெளிப்படுத்தும் முகமாக இந்த மரம் அமைக்கப்பட்டதாக பேர்ள் புரடக்டர் தெரிவித்துள்ளது.



இந்த மரம் டிசெம்பர் 30 வரை காட்சிப்படுத்தப்படும் என்றும் பின்னர் இந்த போத்தல்கள் ஜீரோ ட்ராஷ் மூலம் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# முடியுமானால் கூட்டணி ஒன்றை உருவாக்குங்கள்

## பெரமுனவுக்கு கம்மன்பில சவால்

கொழும்பு, டிசெ. 29



முடியுமானால் கூட்டணி ஒன்றை உருவாக்கிக் காட்டுமாறு உத்தர லங்கா சபாகய, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு சவால் விடுத்துள்ளது.

இலங்கை கமியூனிட்ஸ் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற சந்திப்பொன்றை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது கட்சியின் கூட்டணி குறித்து ஏனைய எதிர்க்கட்சிகளுடனும் தற்போது கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன்போது முதற்கட்ட இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

கடந்த கால தேர்தல்களின் போது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவே பலமிக்க கூட்டணியாக இருந்தது.

எனினும் தற்போது அந்த கட்சியுடன் கூட்டணியை ஏற்படுத்திக் கொள்வதற்கு எவரும் விரும்பவில்லை-என்றார். (அ)

# சிறிய குற்றங்களுக்கு சிறைக்கு பதிலாக வீட்டுக் காவல் திட்டம்!

கொழும்பு, டிசெ. 29

சிறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்படும் சந்தேக நபர்களை அதற்கு பதிலாக வீட்டுக் காவலில் வைத்திருப்பது தொடர்பான சட்டங்களை கொண்டுவர நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான சந்தேகநபர்கள் சிறையில் பல்வேறு நபர்களுடன் பழகுவதுடன் கடுமையான குற்றவாளிகளாக சமூகமயமாகி விடுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இதனை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்புடைய சட்டங்களைக் கொண்டு வந்த பிறகு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் அத்தகைய சந்தேக நபர்களை, மூன்று அல்லது நான்கு மாதங்கள் அல்லது அதற்கும் மேலாக வீட்டுக் காவலில் வைக்க நீதிபதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க முடியும் எனக் கூறினார்.

இவை தொடர்பான சட்டங்களை கொண்டுவருவதற்கு என சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் தொடர்புடைய நிபுணர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் உட்பட சிறிய குற்றங்களில் ஈடுபடுபவர்களை முதல் தடவையாக வீட்டுக்காவலில் வைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

(அ)

# மக்கள் பிரதிநிதிகளின் 2000 மதுபானசாலைகள்!

கொழும்பு, டிசெ. 29

நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள 4 ஆயிரத்து 910 மதுபான விற்பனையகங்களில் தற்போதைய மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொந்தமான 2 ஆயிரம் மதுபான விற்பனையகங்கள் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும இதனை தெரிவித்தார்.

நாட்டின் கொள்கை வகுப்பாளர்கள் மதுபான வியாபாரிகளாகவும் போதைப்பொருள் வியாபாரிகளாகவும் மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர்களின் பெயர்களை வெளியிட தாம் தயங்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, பாடசாலை மாணவர்களின் புத்தகப்பைகளை சோதனை செய்வதை தவிர்த்து, போதைப்பொருள் வியாபாரிகளின் வீடுகளை அதிகாரிகள் சோதனை செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கல்வி tv CHANNEL-1

**29.12.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**29.12.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# முஸ்லிம் தலைமைகள் உரத்துப் பேச தயக்கம்!

## ஹரீஸ் எம்.பி. குற்றச்சாட்டு

அம்பாறை, டிசெ. 29

முஸ்லிம்களின் பிரச்னைகளை பற்றி வெளிப்படையாக பேச எமது முஸ்லிம் தலைவர்கள் தயாரில்லை என்பது கவலையான விடயமாக அமைந்துள்ளது. கிழக்கையும் வடக்கையும் இணைக்கவேண்டும் என்ற விடயம் பேசுபொருளாக மாறியிருக்கும் தறுவாயில்- கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் அபிலாஷைகள், சமூகத்தின் எதிர்காலம் சம்பந்தமாக முஸ்லிம் தலைமைகள் உரத்துப்பேச தயங்குவதேன் என்ற கேள்வி பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

வைத்தியர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பரின் தலைமையில் பாடசாலை மாணவர்களுக்கு டார்க் பௌண்டேஷன் அமைப்பினால் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் கல்விக்கரம் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசியலிலும், கல்வித்துறையிலும் பின்தங்கிய நிலையில் முஸ்லிம் சமூகம் இருந்தபோது கிழக்கை வடக்குடன் இணைத்ததன் விளைவு, சொத்தழிவுகள், உயிரழிவுகள், இடம்பெயர்வுகள், வடக்கிலிருந்து முஸ்லிம்கள் துரத்தப்பட்ட துன்பியல் வரலாறுகளை முஸ்லிம் சமூகம் இன்னும் மறக்கவில்லை. 2023 ஆம் ஆண்டிலும் நாங்கள் விழிப்பாக இருந்து முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக எடுக்கும் பிரயத்தனங்கள் வெறுமனே வந்த ஒன்றல்ல. கல்விப் புரட்சியினால் வந்த சிந்தனை அது. கிழக்கில் உருவாக்கப்பட்ட கல்வியியலாளர்களினால் உருவாக்கப்பட்ட சிந்தனை அது. எங்களை யாரும் இனிமேலும் அடிமைப்படுத்த முடியாது.

முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கு பங்கம் விளைவிக்க கிழக்கு மக்கள் விடமாட்டார்கள். கிழக்கில் கல்விச்சமூகம் விழிப்பாக இருந்து கொண்டிருக்கிறது. கல்வி, சமூகத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தி கொண்டது-என்றார்.(அ)

# இறக்காமம் பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் வெற்றி

அம்பாறை, டிசெ. 29

இறக்காமம் பிரதேச சபையின் 2023 ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் 10 வாக்கினால் நிறைவேற்றப்பட்டது.

இறக்காமம் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட அமர்வு தவிசாளர் எம்.எஸ்.ஜெமில் காரியப்பர் தலைமையில் நேற்று முன் தினம் காலை சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

வரவு-செலவுத்திட்ட வாசிப்புக்கு ஆதரவாக 10 வாக்குகளும், எதிராக 01 வாக்கும் அளிக்கப்பட்டு பெரும்பான்மையுடன் வரவு-செலவுத் திட்டம் நிறைவேறியது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வருகின்ற இச்சபையில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 5 பேரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 4 பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 3 பேரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த ஒருவரும் அடங்கலாக மொத்தம் 13 உறுப்பினர்கள் அடங்குகின்றனர்.

வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்பின்போது தவிசாளர் அடங்கலாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 3 பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் 3 பேரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 3 பேரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த ஒருவரும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கே.எல்.தாஹீர் இதற்கு எதிராக வாக்களித்திருந்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.முஸ்மி மற்றும் என்.எம். ஆசிக் ஆகிய இரு உறுப்பினர்களும் இன்றைய அமர்வில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐஸ் வைத்திருந்த குற்றச்சாட்டு; முதியவருக்கு ஒரு வருடச் சிறை

அம்பாறை, டிசெ. 29

ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த குற்றஞ்சாட்டில் கைது செய்யப்பட்ட 70 வயதுடைய ஒருவருக்கு ஒருவருட சிறைத் தண்டனை விதித்த அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்சா, 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள அட்டாளைச்சேனை பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய ஒருவரை கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் 9 கிராமும் 850 மில்லி கிராமும் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு 3 மாத காலமாக விளக்கமறியலில் வைக்கப்படிருந்தார்.

அந்த வழக்கு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்த போதே மேற்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பத்திரம் வீடியோ காணொளி மூலமாக கடந்த தவணை வாசித்துக் காண்பிக்கப்பட்டது. குற்றத்தை அவர் ஏற்றுக் கொண்டார். அதனையடுத்து அவரது அடையாள மற்றும் தண்டணைத் தீர்ப்புக்காக நேற்று முன்தினம் அக்கரைப்பற்று நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது அவருக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனையையும், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார். (அ)

# மின்சார பிரச்னைகளை தீர்க்கும் நடமாடும் சேவை கல்முனையில்!



அம்பாறை, டிசெ. 29

இலங்கை மக்கள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிழக்கு மாகாணத்திற்கான மின்சார பாவனையாளர்களுடைய பிரச்னைகளை தீர்ப்பதற்கான நடமாடும் சேவை கல்முனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, மின்சார கணக்கின் பெயர் மற்றும் முகவரியை மாற்றுதல், மீற்றர், மின் கம்பங்களை மாற்றுதல், புதிய மின் இணைப்புக்களை வழங்குதல், மின் அளவீட்டு முறைமையை மாற்றுதல், மின் பட்டியல், மின் தடைகள் போன்ற பிரச்னைகளைத் தீர்த்தல்.

மற்றும் மின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல் போன்ற இன்னோரன்ன பல சேவைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் றொசான் வீரசூரிய, கல்முனை மின்சார பிரதம பொறியியலாளர் ஏ. எம். ஹைக்கல், கிழக்கு மாகாண நுகர்வோர் ஆலோசனை குழு உறுப்பினர் ஏ.எம்.தமீம் ஆகியோருடன் இலங்கை பொதுப் பயன்பாடு ஆணை குழுவின் உறுப்பினர்கள், இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்கள், மின்சார பிரச்னை உள்ள நுகர்வோர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்த நடமாடும் சேவையில் 80 பேருடைய பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (அ)

# காரைதீவில் சிறப்பாக ஆரம்பமாகிய அதிகாலை திருவெம்பாவை ஊர்வலம்!



அம்பாறை, டிசெ. 29

இந்துக்களின் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வலம் நேற்று புதன்கிழமை அதிகாலை கோலாகலமாக ஆரம்பமாகியது.

அந்த வகையில், காரைதீவு இந்து சமயவிருத்திச்சங்கம் வருடாவருடம் நடாத்திவரும் திருப்பள்ளி எழுச்சி ஊர்வலமானது நேற்று அதிகாலை 4.00 மணியளவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து விசேட பூசையுடன் ஆரம்பமாகியது.

வீதி ஊர்வலம் அதிகாலை 5.30 மணியளவில் நிறைவுற்றதும் கண்ணகை அம்மன் ஆலயத்தில் திருவெம்பாவை பூசையுடன் நிறைவுற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் பூஜையை நடாத்தி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

தொடர்ந்து திருவாசக முற்றோதல் நடைபெற்றது.

இன்று வியாழக்கிழமை அதிகாலை திருவெம்பாவை ஊர்வலமானது மாவடி கந்தசுவாமி ஆலயத்தை சென்றடையவிருக்கிறது.

சிவனை நினைந்து வழிபடும் இவ்விரதம் நேற்று புதன்கிழமை அதிகாலை ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இறுதியில் பத்தாம் நாள் ஜனவரி 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் திருவெம்பாவை நோன்பு நிறைவடைகிறது.

இக்காலகட்டத்தில் பிரம்ம முகூர்த்த வேளையாம் அதிகாலை 4-6 மணி வேளையில் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதுடன், இவ் ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் அருளைப் பெறுவது இந்துக்களின் வழமையான செயற்பாடாகும். (அ)

# விலை வரம்பை ஏற்றுக்கொண்ட நாடுகளுக்கு எண்ணெய் விற்பனையை தடை செய்த புடின்!

## உலகளவில் எரிபொருள் விலை அதிகரிக்கும் சாத்தியம்

மொஸ்கோ, டிசெ. 29

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பிற்கு பதிலடியாக மேற்கத்திய நாடுகள் ஒப்புக்கொண்ட விலை வரம்பிற்கு இணங்கும் நாடுகள் மற்றும் நிறுவனங்களுக்கு எண்ணெய் விற்பனையை தடை செய்யும் ஆணையை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வெளியிட்டார்.

ரஷ்யா கடந்த செவ்வாயன்று விலை வரம்புக்கு நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட பதிலைக் கொடுத்தது. வரம்பை கடைப்பிடிக்கும் நாடுகளுக்கு பெப்ரவரி 1 முதல் ஐந்து மாதங்களுக்கு மசகு எண்ணெய் மற்றும் எண்ணெய் பொருட்களை வழங்க தடை விதிக்கிறது.

எவ்வாறாயினும், விலை உச்ச வரம்பின் கீழ் தடை செய்யப்பட்ட



பொருட்களுக்கு ஜனாதிபதி சிறப்பு அனுமதி வழங்கலாம் என்று ஆணை குறிப்பிடுகிறது

ஜி 7 நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அவுஸ்திரேலியா ஆகியவை இந்த மாதம் ரஷ்யாவின் கடல்வழி மசகு எண்ணெயின் விலையை கட்டுப்படுத்த ஒப்புக் கொண்டன. அதன்படி, டிசெம்பர் 5 முதல் பீப்பாய்க்கு 60 டொலர் என நிர்ணயம் செய்தன.

60 டொலரை விட குறைந்த விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென தீவிர ரஷ்ய எதிர்ப்பு நாடுகள் வலியுறுத்தின. எனினும், 60 டொலர் நிர்ணயம் மூலம் ரஷ்யாவின் வருவாயைக் கட்டுப்படுத்த முயல்வதுடன், ரஷ்யாவை அதீதமாக சீண்டாமல் உலக சந்தைக்கு தொடர்ந்து எண்ணெய் வழங்குவதை உறுதி செய்ய மேற்கு நாடுகள் முயன்றன.

இந்த தடையையடுத்து, புதிய வாங்குபவர்களைக் கண்டுபிடிப்போம் என்று ரஷ்யா நம்பிக்கை தெரிவித்தது. அத்துடன், உக்ரைனில் அதன் இராணுவ நடவடிக்கையை பாதிக்காது என்று கூறியிருந்தது.

எவ்வாறாயினும், ரஷ்யா ஜனாதிபதியின் ஆணை குறைந்த பட்சம் ஒரு உடனடி விளைவைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது என எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வாளர் வியாசெஸ்லாவ் மிஷ்செங்கோ கூறினார்.

ஏற்கனவே சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது. “இது ஆணையின் நேரடி தாக்கம் என்று நான் நினைக்கிறேன்.” என்றார் அவர்.

சவூதி அரேபியாவுக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது பெரிய எண்ணெய் ஏற்றுமதியாளராக ரஷ்யா உள்ளது, மேலும் அதன் விற்பனையில் பெரும் இடையூறு ஏற்படுவது உலகளாவிய எரிசக்தி விநியோகங்களுக்கு நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும். (அ)

சீனாவுடனான போர் பதற்றம்:

## கட்டாய இராணுவ சேவையை ஒரு வருடமாக்கிய தாய்வான்

பியொங்யாங், டிசெ. 29

தாய்வான் இராணுவ சேவையை 4 மாதங்களில் இருந்து ஒரு வருடமாக நீடிக்குமென அந்நாட்டு ஜனாதிபதி சாய் இங் வென் தெரிவித்துள்ளார். இந்த முடிவு சீனாவுடன் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் வந்துள்ளது.

சீனாவிடம் இருந்து தாக்குதல் நடந்தால், தாய்வானின் பாதுகாப்பை வலுப்படுத்தும் திட்டங்களை நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனாதிபதி சாய், அறிவித்தார்.

அமெரிக்க மற்றும் பிற மேம்பட்ட இராணுவத்தினரிடமிருந்து சில ஆயுதங்களை கடனாகப் பெற்று, கட்டாயப் பயிற்சி பெறுவோர் மேலும் தீவிர பயிற்சிக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று ஜனாதிபதி சாய் கூறினார்.

தாய்வானின் தற்போதைய பாதுகாப்பு அமைப்பு உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் மேம்பட்ட இராணுவங்களில்



ஒன்றான சீனாவின் ஆக்கிரமிப்பைச் சமாளிக்க போதுமானதாக இல்லை என்றும் அவர் கூறினார்.

‘இது மிகவும் கடினமான முடிவு, ஆனால் ஜனாதிபதியாக, இராணுவப் படைகளின் தலைவராக, தேசிய நலன்களையும் நமது ஜனநாயக வாழ்க்கை முறையையும் பாதுகாப்பது எனது தவிர்க்க முடியாத கடமையாகும். சர்வாதிகார விரிவாக்கத்தின் முன்னணியில் தாய்வான் உள்ளது ‘ என்று ஜனாதிபதி சாய் தெரிவித்தார்.

கடந்த 1990ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஆண்களும் மூன்று ஆண்டுகள் வரை இராணுவத்தில் பணியாற்ற வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்து தாய்வான் இராணுவம் மாறிவிட்டது.

அடுத்த சில தசாப்தங்களில், சேவை ஒரு வருடம் மற்றும் 10 மாதங்களுக்கு குறைக்கப்பட்டது, அதற்கு முன் நான்கு மாதங்களாக குறைக்கப்பட்டது.

புதிய விதி 2024ஆம் ஆண்டு ஜனவரியில் அமுலுக்கு வரும். அதே மாதத்தில் தாய்வான் தனது அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும். (அ)

## தென்கொரிய முன்னாள் ஜனாதிபதிக்கு மன்னிப்பு

சியோல், டிசெ. 29

சிறைத்தண்டனை பெற்று வந்த தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி லீ மியுங்-பக் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுவிக்கப்படவுள்ளதாக அந்நாட்டு நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றத்துக்காக 17 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த 81 வயதான லீ மியுங், வயது முதிர்ச்சி மற்றும் மோசமான உடல்நலம் காரணமாக கடந்த ஜூன் மாதம் சிறையில் இருந்து தற்காலிக விடுப்பை பெற்றிருந்தார்.

விடுதலை பெறாமல் இருந்திருந்தால் அவர் எதிர்வரும் 2036 ஆம் ஆண்டு வரை சிறைத் தண்டனை பெறவேண்டியிருந்திருக்கும்.

ஹூண்டாய் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரியாக இருந்து பின்னர் ஜனாதிபதியான லீ மியுங்-பக் மீது 2018 ஆம் ஆண்டில் 16 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, 2020 ஆம் ஆண்டில் அவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

வரி ஏய்ப்பு மற்றும் செம்சங் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடம் இருந்து பல மில்லியன் டொலர்களை இலஞ்சமாக



பெற்றமை போன்றவற்றில் அவர் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டது.

அரசியலில் நுழைவதற்கு முன்பு 35 வயதில் ஒரு பெரிய கட்டுமான நிறுவனத்தின் தலைவராக இருந்த லீ, 2008 முதல் 2013 வரை ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

இந்த நிலையில் இன்று நள்ளிரவில் முதல் அமுலுக்கு வரும் இந்த பொது மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் தான் பதவியேற்றதிலிருந்து யூன் சுக்-யோல் தனது பொதுமன்னிப்பு அதிகாரத்தை இரண்டாவது முறையாகப் பயன்படுத்தியுள்ளார். (அ)

சுந்தர் பிச்சை உட்பட

## ருவிட்டரை பயன்படுத்திவரும் 40 கோடி பேரின் தகவல் கசிவு!

நியூயோர்க், டிசெ. 29

கூகுள் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி சுந்தர் பிச்சை உட்பட ருவிட்டர் பயன்படுத்தும் 40 கோடி பேரின் தகவல்கள் கசிந்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இஸ்ரேலிய சைபர் உளவுத் துறை நிறுவனமான ஹட்சன் ராக் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹேக்கர் ஒருவர் 40 கோடி ருவிட்டர் பயனாளர்களின் தகவல்களை திருடி, டார்க் வெப்பில் விற்பனைக்கு வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 கோடி ருவிட்டர் பயனாளர்களின் மின்னஞ்சல் விப



ரங்கள், பயனர் பெயர், பின் தொடர்பவர்கள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவையும் டார்க் வெப்பில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது. (அ)

## சூகிக்கு நாளை தீர்ப்பு

நைபிட்டோ, டிசெ. 29

மியன்மாரின், தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவர் ஆங் சான் சூகிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள எஞ்சிய 5 குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தீர்ப்பு நாளை வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டு இராணுவம் குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது. மியன்மாரின் இராணுவ ஆட்சியை எதிர்த்து 77 வயதுடைய ஆங் சான் சூகி போராடி வந்தார்.

பின்னர் 2020 ஆண்டில் அவர் தலைமையிலான தேசிய ஜனநாயக லீக் கூட்டணி ஆட்சியை கைப்பற்றியிருந்தது.

எனினும், அந்த தேர்தலில் மோசடி இடம்பெற்றதாக கூறி, மியன்மார் இராணுவம் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றியது.

இதனையடுத்து ஆங் சான் சூகி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதுடன், அவருக்கு எதிராக, இராணுவ கிளர்ச்சி, கொரோனா விதிகளை மீறியமை, ஊழல் முறைகேடு, உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டன.

அந்த வழக்குகளில் தற்போது வரை ஆங் சான் சூகி 26 வருடங்கள் சிறைத்தண்டனை



விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கடந்த 18 மாத விசாரணைகளின் அடிப்படையில் எஞ்சிய 5 வழக்குகளுக்கான தீர்ப்பு, நாளை வெள்ளிக்கிழமை வெளியிடப்படவுள்ளது. (அ)



# 575/8 ஓட்டங்களை குவித்தது ஆஸி!

மெல்பர்ன், டிசெ. 29

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் முதல் இனிங்ஸில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 575 ஓட்டங்களை குவித்த அவுஸ்திரேலிய அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தென்னாபிரிக்க அணி அஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்டில் இரு நாள்களில் தோல்வியடைந்தது. இந்நிலையில் மெல்பர்னில் நடைபெற்று வரும் பொக்ஸிங் டே டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி, களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இந்த டெஸ்டிலும் தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர்கள் மோசமாக துடுப்பெடுத்தாடியிருந்தனர். முதல் இனிங்ஸில் தென்னாபிரிக்க அணி 68.4 ஓவர்களில் 189 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

இரண்டாவது நாளில், 100ஆவது டெஸ்டை விளையாடும் டேவிட் வார்ணர் இரட்டைச் சதமெடுத்து அசத்தினார். காயத்தால் வெளியேறினார். இரண்டாவது நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி, 91 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 386 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஹெட் 48, காரி 9 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள்.

இந்நிலையில், நேற்று சிறப்பாக விளையாடிய அலெக்ஸ் காரி 111 ஓட்டங்கள் எடுத்து அவுஸ்திரேலியா பெரிய ஓட்ட இலக்கை எட்ட உதவினார். இது அவருடைய முதல் டெஸ்ட் சதம். மீண்டும் விளையாட வந்த வோர்ணர் ஓட்டம் எதுவும் சேர்க்கமல் 200 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். ஹெட் 51 ஓட்டங்களும் கிறீன் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களும் எடுத்தார்கள். அவுஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸில் 145 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 575 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. நோர்ட்ஜே 3 விக்கெட்களும் ரபாடா 2 விக்கெட்களும் எடுத்தார்கள்.

386 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளதால் இந்த டெஸ்டை வென்று தொடரைக் கைப்பற்றும் முனைப்பில் உள்ளது அவுஸ்திரேலிய அணி.

# லதாம், வில்லியம்ஸன் சதம் நியூசிலாந்து 430/4 ஓட்டங்கள்!

கராச்சி, டிசெ. 29

ரொம் லதாம், கேன் வில்லியம்ஸன் ஆகியோரின் அபார சதங்கள் கைகொடுக்க பாகிஸ்தானுக்கு எதிராக நியூசிலாந்து அணி நேற்று மாலை தேநீர் இடைவேளை வரை 4 விக்கெட்கள் இழப்புக்கு 430 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 438 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் நியூசிலாந்து அணி விக்கெட் இழப்பின்றி 165 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரொம் லதாம் 78, டெவன் கொன்வே 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடங்கிய இருவரும் சிறப்பாக ஆடினர். 183 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், கொன்வே 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

லதாம் நிதானம் காட்ட, அடுத்து வந்தார் கேன் வில்லியம்ஸன். தொடர்ந்து, லதாம் சதம் அடித்தார். இது அவரின் 13ஆவது டெஸ்ட் சதமாக அமைந்தது.



கேன் வில்லியம்ஸன் அபாரமாக ஆடினார். ஆனால், அடுத்து வ்நத நிக்கோல்ஸ் 22, டரி மிற்செல் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து ஆடிய வில்லியம்ஸன் சதம் அடித்தார். இது அவரின் 25ஆவது டெஸ்ட் சதமாக அமைந்தது.

அச்சமயம் நியூசிலாந்து 430 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வில்லியம்ஸன் 100, பிராச்வெல் 47 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)



# டோனியின் மகளுக்கு மெஸ்ஸி அனுப்பிய பரிசு

சென்னை, டிசெ. 29

ஆர்ஜென்ரீன உதைபந்தாட்ட அணியின் தலைவர் லயனல் மெஸ்ஸி தான் கையெழுத்திட்ட தனது சீருடை ஒன்றை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேந்திரசிங் டோனியின் மகளுக்கு அன்பளித்துள்ளார்.

உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் பிரான்ஸை தோற்கடித்து ஆர்ஜென்ரீனா சம்பியனானது.

இந்நிலையில், மெஸ்ஸியின் கையெழுத்து கொண்ட ஆர்ஜென்ரீனா அணியின் சீருடை தனக்கு கிடைத்ததை எம். எஸ். டோனியின் மகளான ஷிவா சிங் தோனி (7) சமூகவலைத்தளங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

மேற்படி அங்கியில் கையெழுத்திடுள்ள லயனல் மெஸ்ஸி, பாரா ஷிவா என எழுதி கையெழுத்திட்டுள்ளார். இதற்கு ஸ்பானிய மொழியில் “ஷிவாவுக்கு“ என அர்த்தமாகும். லயனல் மெஸ்ஸியும் எம். எஸ். டோனியும் ஏற்கெனவே பரஸ்பர அபிமானம், மரியாதையை பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியாவுடனான டெஸ்ட் தோல்வி; பங்களாதேஷ் பயிற்றுநர் விலகல்!

டாக்கா, டிசெ. 29



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுநர் பதவியிலிருந்து ரசல் டொமின்கோ இராஜி நாமா செய்துள்ளார் என அந்நாட்டு கிரிக்கெட் சபை அதிகாரிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் பங்களாதேஷ் தோல்வியுற்று 2 நாட்களின் பின்னர் ரசல் டொமின்கோவின் இராஜிநாமா குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்தியாவுடனான ஒருநாள் தொடரில் பங்களாதேஷ் 2:1 விகிதத்தில் வென்றது. எனினும், 2 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியுற்றது.

தென்னாபிரிக்கரான ரசல் டொமின்கோ பங்களாதேஷ் அணி பயிற்றுநராக 2019 ஆம் ஆண்டு பதவியேற்றிருந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு அவரின் இராஜிநாமா கடிதம் கிடைத்தது. எமது அடுத்த சுற்றுப்போட்டிக்கு முன்னர் புதிய பயிற்றுநர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையை நாம் ஆரம்பித்துள்ளோம் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் செயல்பாட்டு பிரிவு தலைமை அதிகாரிகளி ஜலால் யூசுப் தெரிவித்துளளார்.

எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இங்கிலாந்துடனான போட்டிகளில் பங்களாதேஷ் பங்குபற்றவுள்ளது.

பங்களாதேஷில் 3 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் 3 சர்வதேச இருபது - 20 போட்டிகளிலும் இங்கிலாந்து அணி மோதவுள்ளது. (ஐ)

# இலங்கைக்கு எதிரான தொடர்கள் இந்திய அணிக்கு இரு தலைவர்கள்!

புதுடில்லி, டிசெ. 29

இலங்கைக்கு எதிராக புதுவருடத்தில் நடைபெறவுள்ள இரு வகை சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் தொடர்ககளை முன்னிட்டு இந்தியாவின் இருபது - 20 அணிக்கு ஹார்திக் பாண்ட்யாவும் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அணிக்கு ரோஹித் சர்மாவும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இருபது - 20 அணியின் உதவித் தலைவராக சூரிய குமார் யாதவும் ஒருநாள் கிரிக்கெட் அணியின் உதவித் தலைவராக ஹார்திக் பாண்ட்யாவும் நியமிக்கப்பட்டுள் ளனர்.

ரிஷாப் பன்நதுக்கு இரண்டு அணிகளிலும் இடம் வழங்கப்படவில்லை. இதேபோன்று ஷிகர் தவானுக்கும் இடம் அளிக்கப்படவில்லை.

விராட் கோலி, கே. எல். ராகுல் ஆகிய இருவரும் இருபது - 20 அணியில் இடமளிக்கப்படவில்லை. எனினும், ஒருநாள் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இருபது - 20 அணியின் விக்கெட் காப்பாளராக அதிரடி ஆட்டக்காரர் இஷான் கிஷான் இணைக்கப்பட்



டுள்ளார். அணியில் இடம்பெறும் பெரும்பாலான வீரர்கள் 25க்கும் குறைவான போட்டிகளில் பங்குபற்றியவர்களாவர். அத்துடன் 4 வீரர்கள் முதல் தடவையாக இந்தியாவின் இருபது - 20 அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இந்தியாவு - இலங்கை இடையிலான 3 போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது கிரிக்கெட் தொடர் வான்கடே (ஜனவரி 1), பூனே (ஜனவரி 5), ராஜ்கோட் (ஜனவரி 7) ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளன.

3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் குவாஹாட்டி (ஜனவரி 10), ஈடன் கார்ட்ன்ஸ் (ஜனவரி 12), திருவனந்தபுரம் (ஜனவரி 15) ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளன.

இருபது - 20 அணி - ஹார்திக் பாண்ட்யா (தலைவர்), இஷான் கிஷான், ருதுராஜ் கெய்க்வாட், ஷூப்மான் கில், சூரியகுமார் யாதவ் (உதவித் தலைவர்), தீப்பக் ஹூடா, ராகுல் திருப்பதி, சஞ்சு சம்சன், வாஷிங்டன் சுந்தர், யுஸ்வேந்த்ர சஹால், அக்ஸார் பட்டேல், அர்ஷ்தீப் சிங், ஹர்ஷால் பட்டேல், உம்ரன் மாலிக், ஷிவம் மவி, முக்கேஷ் குமார். ஒருநாள் அணி - ரோஹித் சர்மா (தலைவர்), /ப்மான் கில், விராத் கோலி, சூரியகுமார் யாதவ், ஷ்ரேயாஸ் ஐயர், கே. எல். ராகுல், இஷான் கிஷான், ஹார்திக் பாண்ட்யா (உதவித் தலைவர்), வாஷிங்டன் சுந்தர், யுஸ்வேந்த்ர சஹால், குல்தீப் யாதவ், அக்சர் பட்டேல், மொஹமத் ஷமி, மொஹமத் சிராஜ், உம்ரன் மாலிக், அர்ஷ்தீப் சிங்.

# யாழ்.பல்கலை மாணவர்களின் திருவெம்பாவை பாராயணம்



யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களினால் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவின் வழிகாட்டலில் மூன்றாவது வருடமாகவும் திருவெம்பாவை பாராயணம் நேற்று புதன்கிழமை திருவெம்பாவை விரதத்தின் முதலாம் நாளில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரா ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான திருவெம்பாவை பாராயணம் இராமநாதன் வீதியூடாக கலட்டி சந்தியை அடைந்து பாலசிங்கம் விடுதி ஊடாக தபால் பெட்டி சந்தி - பரமேஸ்வரா சந்தியை அடைந்து மீண்டும் பரமேஸ்வரா முன்றலில் பாராயணம் முடிவுற்றது.

இதன்போது குறித்த பகுதிகளில் உள்ள ஆலயங்களையும் தரிசித்த வண்ணம் பாராயணம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக பத்து நாட்களும் மாணவர்கள் பாராயணம் முன்னெடுக்கப்பட்டு இறுதி நாள் மாணிக்கவாசகர் எழுந்தருளி திருவெம்பாவை முற்றுப் பெறவுள்ளது.

மேலும் எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி திருவெம்பாவையை முன்னிட்டு மார்கழி பெருவிழாவும் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு, கிழக்கு பிரதிநிதிகளுடன் அரசியல் கூட்டணி குறித்து பேச்சு

## கூறுகிறார் வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, டிசெ.29

**புதிய அரசியல் கூட்டணி அடுத்த மாதம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் கூட்டணியை அமைப்பதற்கு எதிர்க்கட்சிகளுடன் ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

அதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தி அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அதற்காக தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை தற்போது முன்னெடுத்துள்ள போதும் நாட்டு மக்களின் உரிமையை பாதுகாப்பது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு என்றும் அவர் தெரிவித்தார்.



தேர்தல் விவகாரம் உயர்நீதிமன்றம் வரை சென்றுள்ளதால் தேர்தலைப் பிற்போட அரசாங்கம் அரசியல் சூழ்ச்சிகளை முன்னெடுக்காது என எதிர்பார்ப்பதாகவும் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று 5 மாதங்கள் நிறைவடைந்து துள்ள நிலையில் எந்த பிரச்னைகளுக்கும் அவர் தீர்வை வழங்கவில்லை என்றும் வாசுதேவ குற்றம் சாட்டினார். (அ)

# தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனவரியில் வரும்

கொழும்பு, டிசெ. 29

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனவரி முதல் வாரத்துக்கு ஒத்தி வைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு தயாராகியுள்ளது என்றும் இம்முறை மரத்திலான புதிய வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்படாது என்றும் அதிகாரி ஒருவர் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் மார்ச்10ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படும் என்றும் அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வேட்பு மனு கோரல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 05ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் எனவும் அவர் கூறினார்.

தேர்தலில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் பெயர்களை மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறினார். (அ)

# வியட்நாமிலிருந்து 151 இலங்கையர் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்!

கொழும்பு, டிசெ. 29

வியட்நாமில் மீட்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 151 இலங்கையர்கள் நேற்று முன்தினம் இரவு விசேட விமானம் மூலம் நாடு திரும்பியதாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கடமை முகாமையாளர் தெரிவித்தார்.

அவர்களிடம் தனிப்பட்ட வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும், மேலதிக விசாரணைகளுக்காக அவை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்ட 303 இலங்கையர்களையும் மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதற்கான முயற்சிகளை வியட்நாம் அதிகாரிகள் மேற்கொண்ட நிலையில் அவர்களில் 151 பேர் வியட்நாமில் இருந்து இலங்கைக்கு திரும்புவதற்கு உடன்பட்டதையடுத்து நாடு கடத்தப்பட்டனர்.



இலங்கைக்கு நாடு கடத்த வியட்நாம் அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து இரண்டு இலங்கையர்கள் தமது உயிரை மாய்க்க முயற்சித்த நிலையில் யாழ்ப்பாணம்-சாவகச்சேரியை சேர்ந்த ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மருந்துகளின் விலை குறைப்பு பட்டியல் தயாரிக்க விசேட குழு

கொழும்பு, டிசெ. 29

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மருந்துகளின் விலை அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில், மருந்துகளின் விலை குறைப்பு தொடர்பான பட்டியலை தயாரிப்பதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அமைச்சர் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கினார் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# இந்த வருடத்தில் மட்டும் 29,930 பெரும் குற்றங்கள்

கொழும்பு, டிசெ. 29

இந்த வருடத்தில் 29,930 பெரும் குற்றங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

497 கொலைகள் நடந்துள்ளதாகவும், அதில் 223 துப்பாக்கிச் சூடு அல்லது தாக்குதல்கள் காரணமாக நடந்தவை எனவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளதாக அவர் கூறினார்.

இவர்களில் 37 வீதமானவை மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துக்கோரள சுட்டிக்காட்டினார்.

வடமேற்கு மாகாணத்திலிருந்து 13 வீதமும், தென் மாகாணத்திலிருந்து 10 வீதமும், சப்ரகமுவ மாகாணத்திலிருந்து 09 வீதமும், மத்திய மாகாணத்திலிருந்து 08 வீதமும் பதிவாகியுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் சொத்துக்களுக்கு எதிரான 16,317 குற்றங்களும், நபர்களுக்கு எதிராக 5,964 குற்றங்களும் இழைக்கப்பட்டுள்ளன.

கடந்த 11 மாதங்களில் 1,466 வாகனத் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் பெரும்பாலானவை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருட்டுள சம்பவங்கள் எனவும், இதில் 39 வீதமானவை மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள கூறினார்.

மேலும், கொள்ளைச் சம்பவங்களில் 14 வீதம் வடமேற்கு மாகாணத்திலும், 13 வீதம் தென் மாகாணத்திலும் பதிவாகியுள்ளன.

பெரும் குற்றச் செயல்கள் இடம்பெற்ற பொலிஸ் பிரிவுகளில் களனிப் பொலிஸ் பிரிவிலேயே இவ்வருடம் அதிகளவான குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதாகவும், அந்த எண்ணிக்கை 2,287 எனவும் அவர் குறிப்பிட்டார்.

அனுராதபுரத்தில் 2,058 குற்றங்களும், நுகேகொடை பொலிஸ் பிரிவில் 2,018 குற்றங்களும் பதிவாகியுள்ளன.

மேலும், நீர்கொழும்பு, கண்டி, குருநாகல், கல்கிஸை, கொழும்பு, இரத்தினபுரி, கம்பஹா, குளியாப்பிட்டி மற்றும் பாணந்துறை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் 1,000 இற்கும் அதிகமான குற்றச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த காலகட்டத்தில், 3,596 கடத்தல் வழக்குகள், 6,208 வீடுகள் உடைப்பு மற்றும் 2,159 கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021ஆம் ஆண்டில் இலங்கையில் பாரிய குற்றச்செயல்களின் எண்ணிக்கை 4,336 ஆக அதிகரித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில், 31,098 கடுமையான குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன் 2021 இல் அந்த எண்ணிக்கை 35,434 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியே குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது. (அ)

## அமைச்சர்கள்...

அண்மையில், இருவரும் சந்தித்துப் பேசியபோதே மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார் என்று அறிய வருகின்றது. இந்தச் சந்திப்பின்போது, நாட்டின் அரசியல் நிலைமை, பொருளாதார விடயங்கள் பற்றிப் பேசப்பட்டன - என்றும் அறிய வருகிறது. (ஐ)

## அமெரிக்க...

சந்திக்கவுள்ளார் என்றும் அறிய வருகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு பங்குச் சந்தையை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்காவின் புலனாய்வு பிரிவான எவ். பி. ஐ. அவரை கைது செய்து சிறையில் அடைத்தது. அவரின் சொத்துக்களும் முடக்கப்பட்டன. எனினும், அவர் அந்த வழக் கில் போராடி தன்னை நிரபராதி என்று நிரூபித்தார்.

இந்நிலையில், சிறையில் இருந்த காலத்தில், அவர் எழுதிய "Uneven Justice" என்னும் நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு - " விளைந்த நீதி"- விரைவில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படவுள்ளது என்றும் தெரியவருகின்றது. (ஐ)

## தமிழ்கட்சி...

கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்டது கூட்டமைப்பு. அதை பலவீனப்படுத்த வேண்டும் என்று சிலர் செயல்படுகின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சமத்துவ கட்சியின் வன்னி தலைமை பணிமனை திறப்பு விழா நேற்று வவுனியாவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு,

கூட்டமைப்புக்கு கிளிநொச்சியில் போட்டி சமத்துவக் கட்சி மட்டுமே. சமத்துவக் கட்சி ஏன் கூட்டமைப்போடு இணைந்து செயல்பட முடியாது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்படுவோர் எல்லோரும் ஒவ்வொரு கட்சி. எங்களிடம் ஒற்றுமை இல்லை. எமது கட்சிகள் சுயலாபத்துடன் செயல்பட நினைக்கிறார்கள். சிலர் நினைக்கிறார்கள் எல்லோரும் இணையப் போகிறார்கள் என்று. நிச்சயம் நாம் இணையப் போவதில்லை.

இனப் பிரச்னை தீர்வை தமிழ் கட்சிகளின் தலைவர்களிடம் எதிர் பார்க்க முடியாது. நாம் மாகாண சபையை கேட்க ஒரு கட்சி அதற்கு எதிராகப் பல கொடிகளை பரப்பி எழுச்சி ஊர்வலம் நடத்துகிறது. இப்படி நடக்கையில் சிங்கள கட்சிகள் தீர்வை தருமா?

ஒரு கட்சி மாகாண சபை வேண்டும் என்கிறது. மற்றொரு தரப்பு வேண்டாம் என்கிறது. இப்படி இருக்கும்போது நாம் எப்படி தீர்வைத் தருமாறு கேட்கிறார்கள். எமக்கு தீர்வு தரக்கூடாது என்று சிங்கள தரப்புகள் அனைத்தும் ஒன்று படும். ஆனால், எங்களுக்கு தீர்வு தேவை. நாம் ஒன்றுபடப்போவதில்லை. நான் கூட்டமைப்பை பலப்படுத்தவே விமர்சிக்கிறேன். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்டது கூட்டமைப்பு. அதை பலவீனப்படுத்த வேண்டும் என்று சிலர் செயல்படுகின்றனர். கூட்டமைப்பு பலவீனப்படுவதை அவர்கள் விரும்புவர்.

உள்ளூராட்சி தேர்தலில் தனித்து போட்டியிட போகின்றனராம் தமிழரசுக் கட்சியினர். விரும்பினால் போகட்டும். அவர்களுக்கு அக்கறை இல்லை. அக்கறை இருந்தால் கூட்டமைப்பாகவே இருக்க வேண்டும். தமிழ்த் தலைவர்கள் ஒருபோதும் தீர்வைப் பெற்றுத் தரமாட்டார்கள். இப்போது இருக்கும் தலைவர்களால் அது முடியாது. தமிழர் தரப்பு ஒரு தரப்பாக அரசுடன் பேச வேண்டும். அந்தப் பேச்சுத்தான் வெற்றியளிக்கும் - என்றார். (ஐ)

## யாழில்...

நடைபெற்றது. இதில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ. இளங்கோவன் மேற்படி கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் மூன்று முக்கியமான நிகழ்வுகள் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சுதந்திர தின விழா பெப்ரவரி 4ஆம் திகதி கொழும்பில் இடம்பெறுகிறது. இதையடுத்து, பெப்ரவரி 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள கலாசார மத்திய நிலையத்தில் அதன் முழுமையான செயல்பாட்டு நிகழ்வோடு சுதந்திர தின விழா ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக, கலாசார மத்திய நிலையத்தின் ஓர் இணைப்பு முகாமைத்துவ குழுவில் அங்கம் வகிக்கும் ஆளுநர், இந்திய துணை தூதரகத்தின் அதிகாரிகள், யாழ். மாநகர சபையின் அதிகாரிகள், மத்திய கலாசார அமைச்சுடன் இணைந்து கலாசார மத்திய நிலையத்தில் நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன், சுதந்திர தின நிகழ்வு மாகாண மட்டத்தோடு இணைந்த ஒரு விழாவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு ஜனாதிபதி கலந்துகொள்வதற்கு ஏற்றவாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## ஒருவருடத்துக்கு...

எதிர்வரும் மார்ச் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்து ழைப்புகளும் இலங்கைக்கு கிடைக்க இருப்பதால் நாட்டின் பொருளாதாரம் சுமுகமான நிலைக்கு திரும்பும். இதன் பின்னர் நாட்டுக்குப் பாதிப்பின்றி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த லாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சில் நடந்த இந்தக் கலந்துரையாடல் குறித்து முக்கியஸ்தர் ஒருவர் தகவல் அளிக்கையில்,

உள்ளூராட்சி மன்ற தேர்தலை மீண்டும் ஒரு வருடத்திற்கு ஒத்திவைப்பது சிறந்ததாக கலந்துரையாடலின் போது கருதப்பட்டது. வரலாறு காணாத படுமோசமான பொருளாதார நெருக்கடியை நாடு தற்போது எதிர் கொண்டுள்ளது. அரச வருமானமானது, அரச ஊழியர்களின் ஊதியம், ஓய்வூதியம் மற்றும் சமுர்த்தி கொடுப்பனவுகளுக்கே போதுமானதாக உள்ளது. எனவே, இவ்வாறானதொரு நெருக்கடியான நிலைமையில் தேர்தலொன்றுக்கு செலவதானது நாட்டை மேலும் பாதாளத்தில் தள்ளிவிடும்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அடுத்த வருடம் மார்ச் மாதம் அளவில் இதன் பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறானதொரு நிலைமையில் தேர்தல் ஒன்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது ஏற்புடையதல்ல. அவ்வாறு நிதி ஒதுக்கும் பட்சத்தில் கடந்த 6 மாத காலமாக நாட்டின் நிதி நெருக்கடியை தீர்க்க முன்னெடுக்கப் பட்ட முயற்சிகள் மற்றும் திட்டங்கள் கூட பயனற்றதாகி விடும். இதனால் நாட்டில் பொருளாதாரத்துக்கே பாதிப்பும் ஏற்படும்.

எனவே, தேர்தலுக்காக பெரும் தொகை செலவிடும் போது அரச வருமானத்தை நேரடியாகப் பாதிக்கும். மீண்டும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டால் கட்டியெழுப்புவது என்பது கடினமாகி விடும். அதே போன்று அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புகளும் இலங்கைக்கு கிடைக்கும். மேலும் புதிய வரி கொள்கை ஊடாக அரச வருமானம் அதிகரிக்கும். இதன் போது நாட்டின் பொருளாதாரத்துக்கு தாக்கம் ஏற்படாதவாறு தேர்தலை நடத்த முடியும் - என்றார். (ஐ)

# 30 ஆயிரம் அரச ஊழியர்கள் 31இல் ஓய்வு பெறுகின்றனர்!

கொழும்பு, டிசெ. 29

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் 30 ஆயிரம் அரச ஊழியர்கள் ஓய்வுபெறவுள்ளனர் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.



எவ்வாறாயினும், இவ்வளவு பேர் ஓய்வு பெற்றாலும் அரச சேவையில் வீழ்ச்சி ஏற்படாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன்படி டிசெம்பர் 31ஆம் திகதி முதல் ஓய்வுபெறும் அரச ஊழியர்களில் பாதுகாப்பு பிரிவு, கூட்டுத்தாபனங்கள், சபைகள் என அனைத்து நிறுவன ஊழியர்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, அரச சேவையை கொண்டு செல்வதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரச சேவையை கொண்டு செல்வதுடன் அரச சேவை மீள் மதிப்பீடு செய்யப்படவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அத்தியாவசிய விடயங்கள் இருப்பின் நிதி அமைச்சு மற்றும் முகாமைத்துவ திணைக்களம் ஊடாக அவ்வாறான பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதில் எந்த தடையும் இல்லை எனவும் அமைச்சர் கூறினார்.

மேலும், ஓய்வு பெறும் 30 ஆயிரம் பேரின் சம்பளத்தில் 85 வீதத்தை அரசாங்கம் ஓய்வூதியமாக வழங்க வேண்டும் எனவும், அரசாங்கம் என்ற வகையில் நாட்டின் சுமையை குறைத்து வழங்க சகல வழிகளிலும் செயல்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்துள்ளார். (ஐ)

## கோவிட்...

சுகாதார அமைச்சில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவற்றை தெரிவித்தார்.

மேலும், இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் மருந்து கொள்வனவு செய்வது தொடர்பிலும், சுகாதார அமைச்சர் என்ற ரீதியில் நான் இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பொய்யான செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்திய மருந்து உற்பத்தி தொடர்பில் சமூக மட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் உண்மை தன்மையை தெரிந்து கொள்வதற்காகவே எனது தனிப்பட்ட செலவில் இந்தியாவுக்கு சென்றேன். இந்திய மருந்து உற்பத்தி நிறுவனம் எனது செலவுகளுக்கு பொறுப்பேற்கவில்லை.

மருந்து கொள்வனவு திட்டமிட்ட வகையில் தாமதப்படுத்தப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு முறையற்றது. அத்தியாவசிய உணவு பொருட்களை உடனடியாக கொள்வனவு செய்வதை போன்று மருந்து பொருட்களை விரைவாக கொள்வனவு செய்ய முடியாது.

விலை மனுக்கள் மற்றும் கட்டணத்தின் முற்பணத்தை செலுத்திய பின்னரே உரிய நிறுவனம் மருந்து உற்பத்தியை ஆரம்பிக்கும். உயிர்காக்கும் 14 வகையான மருந்து பொருட்கள் தேவையான அளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் மருந்து தட்டுப்பாடு இல்லை என்று ஒருபோதும் குறிப்பிடவில்லை.

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக் குறையால் மருந்து கொள்வனவில் சிரமம் காணப்படுகிறது. ஆனால், மருந்து தட்டுப்பாடு நாட்டில் பாரதூரமாக இல்லை.

பூகோள மட்டத்தில் கோவிட் பெருந்தொற்று பரவல் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் கோவிட் வைரஸ் தொற்று பரவல் சடுதியாக அதிகரித்துள்ளது. நாட்டில் கோவிட் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் தளர்த்தப்பட்டுள்ளன. கோவிட் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் தொடர்பில் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். நாட்டின் பொருளாதார நிலைமையை அவதானத்தில் கொண்டு அனைத்து தீர்மானங்களையும் எடுக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

முகக்கவசம் அணிதலை நாட்டு மக்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். மொத்த சனத்தொகையில் 70 சதவீதத்துக்கும் அதிகமானோர் மூன்றாவது தடுப்பூசி (பூஸ்டர்) இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை. நாட்டு மக்களும் தமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

## ஹெரோயினால்...

என்று அறிய வருகிறது.

யாழ். போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையில் அதிகளவு ஹெரோயினை உள்ளீர்த்ததே மரணத்துக்குக் காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழ் தேசிய...

அத்துடன், அனைத்து தமிழ் தரப்புக்களையும் ஒன்றிணைக்கும் பேச்சுக்கள் நடப்பதாகவும் கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் "மாவை சேனாதிராசாவின் தலைமையில் தமிழ் தேசியத் தரப்புக்கள் ஓரணியில் திரளலாம்", என்று யோசனை தெரிவித்துள்ளார். (ஐ)

## தமிழ் தரப்பு...

அதிகாரத்தால் இல்லாது செய்யப்பட்ட மாகாணங் களுக்கான அதிகாரங்கள் அனைத்தும் மீளவும் மாகாண சபைகளிடம் கையளிக்கப் பட வேண்டும் என்றும் வலியுறுத்துவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறியுள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவற்றைத் தெரிவித்தார்.

மேலும், தான் அமைச்சரவை உப குழு பிரதிநிதி - அரசியல் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் இரட்டை வகிபாகம் கொண்டுள்ளேன். 13ஆம் திருத்தச் சட்டம் உருவாக்கப் பட்ட போது மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளவும் கையளிக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் கோரியுள்ளேன் - என்றார்.(ஐ)

## புலிகள்...

கோட்டையிலிருந்த வாறே இந்திய கலாசார மையத்தையும் பார்வையிட்டவர்கள் அது தொடர்பாகவும் தகவல்களை கேட்டறிந்தனர்.

இதேவேளை, சீனத் தூதுவர் குழுவினர் இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர். சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையை திறந்து வைப்பதுடன், 50 குடும்பங்களுக்கு உதவி திட்டங்களையும் வழங்கவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# போதைவஸ்து விற்பனை பொலிஸாருக்கு தொடர்பு

## நீதி அமைச்சர் விஜயதாஸ



கொழும்பு, டிசெ. 29

கைதிகள் செய்த குற்றமோ அல்லது குற்றமோ எதுவாக இருந்தாலும், சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளின் கண்ணியத்தை பாதுகாக்க பாடுபட வேண்டும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சில சந்தர்ப்பங்களில் சிறிய பின்னடைவுகள் ஏற்பட்டால், சிறைச்சாலைகள் திணைக்களம் கைதிகளின் உரிமைக ளைச் சிறந்த முறையில் பாதுகாக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கைதிகளின் திறமைகள் மற்றும் திறமைகளை வெளிப்படுத்தும் 'ஷில்பா 2022 சிர சார' கண்காட்சியை ஆரம் பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது 85 வீதமான கைதிகள் போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள அதே வேளை, 95 வீதமானோர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள். இலங்கையில் போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிப்பதற்கு பாரியளவி லான போதைப் பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் நபர்களை ஒடுக்க வேண்டும்.

நாட்டில் போதைப்பொருள் பரவுவதற்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உட்பட சில அரசியல்வாதிகள் ஆதரவளிக்கின்றனர் - என்றார். (அ)

# 39,200 ஓடுகள் நிராகரிப்பால் 21 இலட்சம் ரூபாய் நட்டம்!

கொழும்பு, டிசெ. 29

மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் உஸ்வெவ தொழிற்சாலைகளில் இருந்து சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட 39,200 ஓடுகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நிராகரிக்கப்பட்ட ஓடுகளை எடுத்துச் செல்ல, சபைக்கு 21 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மாநகராட்சிக்கு சொந்தமான ஒன்பது தொழிற்சாலைகளில் ஏழு தொழிற்சாலைகளில் நிலம் மற்றும் கட்டடங்களின் உரிமையை உறுதி செய்வதற்கான உரிமை பத்திரங்களோ, சட்டபூர்வ ஆவணங்களோ இல்லை என்றும் அறிக்கை கூறுகிறது.

மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் நிலம் மற்றும் கிட்டத்தட்ட நான்கு கோடி மதிப்புள்ள கட்டடங்களுக்கு நிலையான சொத்து பதிவேடு பராமரிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நிலையான சொத்துக்கள் கணக்கெடுக்கப்படவில்லை மற்றும் கணக்கெடுப்பு அறிக்கைகள் கணக்காய்வு அலுவலகதிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அறிக்கை கூறுகின்றது. (அ)

# அநுராதபுரம் - வவுனியா ரயில் சேவை ஜனவரி 5 முதல் 5 மாதங்கள் நிறுத்தம்

## 33 பில்லியன் ரூபா செலவில் ரயில் பாதை புனரமைப்பு

கொழும்பு, டிசெ. 29

இந்திய கடன் திட்டத்தின் கீழ் 33 பில்லியன் ரூபா செலவில் அநுராதபுரத்திலிருந்து வவுனியா வரையான புகையிரயில் பாதை மீள்புனரமைக்கப்படவுள்ளது. புனரமைப்புப் பணிகளுக்காக அநுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கான ரயில் சேவைகள் ஜனவரி 5ஆம் திகதி முதல் 5 மாதங்களுக்கு இடைநிறுத்தப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எனினும் அநுராதபுரத்துக்கு வரும் பயணிகள் யாழ்ப்பாணம் செல்வதற்காக குறித்த காலப்பகுதியில் விசேட பஸ் சேவைகளை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இவ்வாண்டு ஜனவரியில் ரயில் திணைக்களத்தின் மாதாந்த வருமானம் 400 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. எனினும் கடந்த ஒகஸ்ட் மாதத்தின் பின்னர் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் மாதாந்த வருமானம் 1000 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 150 சதவீத உயர்வாகும். எவ்வாறிருப்பினும் இந்த வருமானத்தின் மூலம் எரிபொருளுக்கான செலவை மாத்திரமே ஈடு செய்யக்கூடியதாகவுள்ளது. சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளை இதன் மூலம் ஈடு செய்ய முடியாதுள்ளது.

2023ஆம் ஆண்டு முதல் மக்களுக்கான ரயில் சேவைகளை மேலும் மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். அதற்கமைய கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை பயணிக்கும் வடக்கு ரயில் பாதையை பாரியளவில் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் கடன் திட்டத்தின் கீழ் கடந்த முறை ரயில் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. இதன் மூலம் 100 கிலோ மீற்றர் வேகத்தில் சுமூகமாக பயணிக்கக் கூடிய ரயில் சேவையை மக்களுக்கு வழங்கக் கூடியதாகவுள்ளது.

பல நூறு ஆண்டுகளாக அபிவிருத்தி செய்யப்படாமல் மிகவும் மோசமான நிலைமையிலுள்ள அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையான ரயில் பாதையை ஜனவரி 5ஆம் திகதியிலிருந்து புனர்நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய அன்றிலிருந்து அடுத்த 5 மாதங்களுக்கு இந்த ரயில் பாதை மூடப்பட்டு ரயில் சேவையும் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும்.

எவ்வாறிருப்பினும் அநுராதபுரத்திற்கு வரும் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு செல்வதற்காக இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் மாகாண தனியார் பஸ் சங்கங்களுடன் இணைந்து விசேட பஸ் சேவைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து அநுராதபுரத்திற்கான ரயில் சேவைகள் தொடர்ந்தும் இடம்பெறும்.

அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையான ரயில் பாதையை மீள்நிர்மாணிப்பதற்காக 33 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# சீன அரசின் உலருணவு பொதி மன்னாரில் நேற்று விநியோகம்



மன்னார், டிசெ. 29

சீன மக்களிடம் இருந்து சீன அரசின் ஊடாக இலங்கை மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி உலர் உணவு பொதிகள் நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் வைத்து வைபவ ரீதியாக வழங்கப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையின் அமுலாக்கத்தில் குறித்த உலர் உணவு பொதிகள் வைபவ ரீதியாக வழங்கப்பட்டன.

இதன்போது இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஹூவெய், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் தலைமை அரசியல் அதிகாரி மற்றும் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் லுவோ சோங்,இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் மூன்றாம் நிலை செயலாளர் வென்சாங், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளைத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளைத் தலைவர் ஜே.கெனடி, இராணுவ உயர் அதிகாரிகள் இணைந்து குறித்த உலர் உணவு பொதிகளை வழங்கினர்.

மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து வரிய,பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் விசேட தேவைக்கு உள்ளான 1380 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் முதல் கட்டமாக 300 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (அ)

# கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு; இலங்கை தரப்புக்கும் தொடர்பா?

சென்னை, டிசெ. 29

தமிழகம்- கோயம்புத்தூரில் கடந்த ஒக்டோபர் 23ஆம் திகதியன்று இடம்பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணையின் மூலம் கோயம்புத்தூரின் மதத்தலம் ஒன்றுக்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு தெளிவாகிறது என்று இந்திய புலனாய்வுச் சேவையான என்.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யபபட்டுள்ள மொஹமட் அஸாருதீனுக்கு பிணைக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆட்சேபித்து, இந்திய தேசியப் புலனாய்வுச் சேவை கேரளா எர்னாகுளம் நீதிமன்றில் இந்த காரணங்களை வெளியிட்டது.

இலங்கையின் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பில் அஸாருதீன், கேரளாவில் ஐ.எஸ் அமைப்பின் அங்கத்தவரான மொஹமட் நௌஷான் என்பவருடன் கலந்துரையாடியதாக தேசியப்புலனாய்வுப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது, மொஹமட் அசாருதீன் ஒரு பெரிய தாக்குதல் திட்டத்தைப் பற்றி அவருடன் பேசியுள்ளார் என்றும் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அசாருதீன் கோயம்புத்தூரில் உள்ள ராயன் பள்ளிவாசலுக்கு அடிக்கடி செல்பவர் என்றும் அங்கு வைத்தே அவர் ஏனைய சந்தேக நபர்களைச் சந்தித்து தென்னிந்தியா வில் தாக்குதல்களை மேற்கொள்ள ஆட்சேர்ப்பில் ஈடுபட்டார் என்றும் நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அவர், சஹ்ரான் ஹாசிம் உட்பட்டவர்களின் அடிப்படைவாத பேச்சுக்கள் அடங்கிய காணொளிகளை பகிர்ந்து வந்ததாகவும் இந்திய புலனாய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த தாக்குதலில் மூளையாகச் செயல்பட்டவரும், தற்கொலை நடத்தியவருமான சஹ்ரான் ஹாசிம் தமிழகத்தில் ஜிஹாத்துடன் தொடர்புகளை பேணி வந்துள்ளார்.

பல ஆண்டுகளாக, அவர் இந்தியாவுக்கு பயணித்து, குறிப்பாக தமிழ் நாட்டில் ஏராளமான இந்திய முஸ்லிம்களை பயங்கரவாதத்தின் பக்கத்துக்கு ஈர்த்தார் என்றும் இந்திய தேசிய புலனாய்வுப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

# விசேட டெங்கு ஒழிப்பு தினம்!

கொழும்பு, டிசெ. 29

நாளையும், நாளை மறுதினமும் விசேட டெங்கு ஒழிப்பு தினங்களாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

2022 டிசெம்பர் 26ஆம் திகதி வரை இலங்கை முழுவதும் மொத்தம் 75 ஆயிரத்து 434 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இது 2021இல் பதிவான எண்ணிக்கையை விட இரு மடங்காகும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நிலைமை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதால், 2023 ஜனவரியில் நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகும் அபாயத்தை இலங்கை எதிர்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளையும், நாளை மறுதினமும் பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களில் நுளம்பு பெருகக்கூடிய இடங்களைக் கண்டறிந்து அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இது வேலை செய்யும் இடங்கள் மற்றும் பொது இடங்களுக்கும் பொருந்தும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.